விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 254 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 13 வியாழக்கிழமை (29.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# அதிகாரப் பகிர்வு தொடர்பில் நிலைப்பாட்டை வெளியிடுங்கள்

## ஜனாதிபதி வேட்பாளர்களிடம் சிவில் சமூக அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

**இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு அதிகாரப் பகிர்வு தொடர்பில் தங்கள் நிலைப்பாட்டை வெளியிடுமாறு ஜனாதிபதி வேட்பாளர்களிடம் சிவில் சமூக அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளது.**




நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த மத அமைப்புக்களினதும் சிவில் சமூக அமைப்புகளினதும் உறுப்பினர்களும் கல்விமான்கள் சமூகத்தினரும் கொள்கை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

இவர்கள் பல மாதங்களாக நடத்திய விரிவான கலந்தாலோசனைகள் மற்றும் பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னரே இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்குகளை வேட்பாளர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்குவதற்காக அவர்களிடம் கையளிக்கப்பட 16

## வங்களாவில் காற்றழுத்தம்

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு வங்கக் கடலைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தில் இன்று குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் புதிய அறிவிப்பை வெளி 15

## தொடர் காய்ச்சல்

### குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர் காவற் றுறையில் தொடர்ச்சியாகக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த 7 பிள்ளைகளின் தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அன்னலட்சுமி 15

## வரியை மீளாய்வு செய்ய ஐ.எம்.எப்புடன் இணக்கம்

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)



செலுத்தும் வரியை மீளாய்வு செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி 16



அலங்காரக் கந்தனின் கைலாச வாகனம்

## விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பியோடிய கார்ச் சாரதியை

### நையப்புடைத்த இளைஞர்கள் வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா நகரில் ஆபத்தான வகையில் காரைச் செலுத்தி தொடர்ச்சியான விபத்துக்களை ஏற்படுத்திய கார்ச் சாரதி இளைஞர்களால் விரட்டிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். 15

## நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொறுப்பை பெரமுன ஏற்கும் - நாமல்

(கொழும்பு)

நாட்டின் பொது மக்களை புறக்கணிக்காமல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொறுப்பை ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஏற்கும் என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாவத்தகம பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் 15

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் போலியான கருத்துக் கணிப்புகள்

### வாக்காளர்களுக்கு மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் போலிக் கருத்துக் கணிப்புகள் குறித்து வாக்காளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போலியான கருத்துக் கணிப்புகளுக்கும் உண்மையான கருத்துக் கணிப்புகளிற்கும் இடையிலான வித்தியாசத்தை அடையாளம் காண்பது கடினமான விடயம் எனத் தெரிவித்துள்ள அவர் இதன் காரணமாக வாக்காளர்கள் எச்சரிக்கை 15

## பருத்தித்துறையில்

### நபரொருவரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை இன்பர் சிட்டிப் பகுதியில் வீட்டில் தனிமையில் இருந்த ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15

## ஜனாதிபதி ரணில், சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரது தேர்தல் விஞ்ஞாபனங்கள் இன்று ஒரேநாளில் வெளியாகவுள்ளது.

அந்தவகையில் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக களமிறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிடப்படவுள்ளதாக அவரது அரசியல் விவகாரங்களுக்கான அலுவலகம் நேற்று உத்தியோகபூர்வமாக அறி 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 24 மணிநேரத்தில்

## நாடளாவிய ரீதியில் 663 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 663 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 649 ஆண்களும் 14 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 17 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 2 பேரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


## மரண அறிவித்தல்

தோற்றம்
01 - 10 - 1948



மறைவு
24 - 08 - 2024

### சுப்பையா இராஜேஸ்வரன்

உச்சியோடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராஜேஸ்வரன் அவர்கள் கடந்த 24.08.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.08.2024 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உச்சியோடை,
மானிப்பாய்.

(1801)

தகவல்:
குடும்பத்தினர்


## நாட்டைக் குழப்பி பதவியில் தொடர ரணில் சூழ்ச்சி

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் குழப்பம் ஒன்றை ஏற்படுத்தி தொடர்ந்தும் ஜனாதிபதியாகவே இருப்பதற்கான சூழ்ச்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார். நாட்டில் 9 ம் திகதி இரத்தக் களரியை சுவைத்தவர்கள் ஆட்சியைப் பிடிக்க முயன்று வருகின்றனர்.

தேர்தல் முடிவு வெளிவருவதற்கு முன்னதாகவே அவர்கள் இரத்தக் களரியை சுவைப்பதற்கு தயாராகி வருகின்றனர்.

தற்போது ரணில் தேர்தல் வெற்றிக்காக பல முயற்சிகளை மேற்கொள்கிறார். இதற்காக அவர் எடுக்கின்ற நடவடிக்கைகளால் சஜித்தே பாதிக்கப்படுகிறார்.


அதனால் ரணிலுக்கும் நன்மை இல்லை. மூன்றாம் தரப்பு ஒன்றே நன்மையைப் பெற்றுக் கொள்ளப் போகிறது.

அந்த மூன்றாம் தரப்பானது, ஏற்கனவே ஒன்பதாம் திகதிகளில் இரத்தத்தை சுவைத்த அணியினர்தான்.

அவர்கள் நாட்டில் கலவரங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போது, தேர்தல் முடிவை வெளியிடாமல், தொடர்ந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பதவியில் நீடிப்பதற்கான சூழ்ச்சி மேற்கொள்ளப் படுகிறது என்று விமல் வீரவன்ச குற்றம் சுமத்தினார். (ம-7)

## ஜனாதிபதியாவதற்கு அநுர பொருத்தமற்றவர்

### விக்னேஸ்வரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் ஜனாதிபதியாவதற்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பொருத்தமானவர் என்று தாம் கருதவில்லை என, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் ஜனாதிபதியாக தெரிவானால், நாட்டை பிரச்சினைகள் இன்றி நடத்திச் செல்லவோ, பொருளாதார ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்கவோ அவரால் முடியாமல் போகும் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அநுர குமார திஸாநாயக்கவினால் இலங்கையில் இந்து - சீன பிரச்சினை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார். (ம-7)


உ
சிவமயம்



காரைநகர் களபூமி
திருவருள்மிகு ஸ்ரீ கற்பக விக்கினேஸ்வர சுவாமி கோவில்
(கிழக்கு றோட், தெருவடிப் பிள்ளையார்)

## மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

**காலம் : 30.08.2024 வெள்ளிக்கிழமை**

**நேரம் : காலை 6.56 மணி முதல் 8.46 வரை**

மஹாயாக மஹா கும்பாபிஷேகப் பெருவிழா – 2024
இனிதே சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

**கனகசபை தர்மகுலசிங்கம்**

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பழமுதிர்ச் சோலை,
காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன கிருமி நாசினிகளால் மண்வளம் குன்றும் அபாயம்!

## ரூ.4 மில்லி. பெறுமதியான சட்டவிரோத கிருமிநாசினிகளும் யாழில் மீட்பு

**(யாழ்ப்பாணம்)**

**சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படும் கிருமி நாசினிகளால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் மண் வளமும் உடனடியாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என யாழ்.மாவட்ட விவசாய திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் தெரிவித்துள்ளார்.**

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட விவசாய இரசாயனம், களை நாசினிகள், பூச்சி நாசினிகள் விற்பனை அதிகரித்துள்ள நிலையில், யாழ். மாவட்டம் முழுவதும் விவசாய இரசாயன கட்டுப்பாட்டுப்பிரிவினர் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின்போது ஆவரங்கால் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்ட வேளை அங்கிருந்து சுமார் 4 மில்லியன் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத களை நாசினிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்திற்கு சொந்தமான களஞ்சியசாலையிலும் இருந்து பெருந்தொகையான கிருமி நாசினிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதனை அடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் மீது விவசாய திணைக்களத்தினால் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விவசாயிகள் இவ்வாறான சட்டவிரோத களை நாசினிகள் தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும்.

அத்துடன் சட்டவிரோதமான களை நாசினி வியாபாரம் தொடர்பாக தகவல் அறிந்தால் விவசாய திணைக்களத்திற்கு தகவல் வழங்கவேண்டும் என மாவட்ட விவசாய திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-6-33)

## ரணிலுடன் இணையவுள்ள சில தமிழ் எம்.பிக்கள்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள இரண்டு அல்லது 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இந்த ஊடக சந்திப்பில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், தமிழ் முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன் மற்றும் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோரும் விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளதாகத் தெரிவித்தார். (நி-6)


## துயர் பகிர்கின்றோம்

மண்ணில் 08 08 1940



விண்ணில் 19 08 2024

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. அருந்தினி குருபரன் அவர்களின் மாமியார்

**திருமதி. நமசிவாயம் புனிதவதி**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1890)

பிரிவின் துயரில்-
அதிபர், ஆசிரியர்கள், யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

## கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

மலர்வு 28 . 07 . 1974



உதிர்வு 26 . 08 . 2024

**அமரர். லயன்.பத்மநாதன் ஐங்கரன் MJF**

முன்னைநாள் பிரபல வர்த்தகர் இங்கிரிய, கணபதிப்பிள்ளை தம்பதிகளின் பேரனும், வாரிவளவு பத்மநாதன் தம்பதிகளின் ஏக புத்திரனும், யாழினி (தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்) அன்புத் துணைவரும், ஊடகவியலாளர், வடமாகாண சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர், யாழ் பிரதேச செயலக சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர், யாழ். சிற்றி லயன் கழக முன்னாள் தலைவர், தீவக லயன் கழக தற்போதைய தலைவர், பிரபல சமூக சேவையாளர், பத்மநாதன் ஐங்கரன் வாரிவளவான் கருணையினால் மகிழ்வுடன் பெற்றெடுத்த ஒரே புத்திரன் ஐங்கரன் எனும் திருநாமத்தோடு பிள்ளையார் துணையோடு பெரும்புகழ் சேர்த்து மக்கள் சேவையென தீவக சிங்கங்களுடன் தலைமைத்துவத்தை ஏற்று வெளிநாடுகள் சென்றும் விருப்புடனே தாய்மண் திரும்பி 50 வயதை பெருமையுடன் கொண்டாடி மகிழ்ந்து கொண்டவர்.

விழிகள் இமைக்க மறந்திட்ட நொடிகளில் கூட
சிந்தித்த வேளையெல்லாம் சிந்தனையில் உந்தன் நிழல்
தொலைவாகிப் போனாலும் தொலைந்து போகாத உன்
நினைவலைகளை மீட்டிட நினைக்க வலிக்கிறது நெஞ்சம்
விழிநீர் சொரிந்திட விம்மித் தவிக்கிறது மனம்
அழுது விம்முகின்ற நாம் மெழுகுபோல் உருகுகின்றோம்
மண்ணுலகம் திருப்தியன்றோ விண்ணுலகம் சென்றனையோ!
பரிவு கொண்ட எமையெல்லம் பிரிந்து சென்றதேனோ?

அன்னாரின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பரத்து தில்லைக்கூத்தனின் திருப்பாதங்களை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-1070)

303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்-காரைநகர்.

லயன் தேவராசன் JP தீவக லயன்ஸ் கழகம்
ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பு சேவைகள்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 22 . 08 . 1944



மறைவு 10 . 09 . 2023

**அமரர். செல்லையா இராசரட்ணம்**

( SRP மோட்டர்ஸ் உரிமையாளர்)

திதி-ஏகாதசி


எங்களின் இதய தெய்வமே!
ஓராண்டு சென்றாலும்- உம்
நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
எங்கள் நெஞ்சமதில் நிறைந்திருக்கும்
அன்புத் தெய்வத்தின் பொற்பாதத்தில்
மலர் தூவி அஞ்சலி செய்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

(1900)

காரி கோவிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# காரைநகர் ஐங்கரன் கடினங்களைக் கச்சிதமாக கடந்த பேராளுமை

அநீதி கண்டு கொதித்தெழுந்த ஓர் ஆத்மா அடங்கிப் போயிற்று.

ஆம், ஒரு கணப் பொழுது. விபத்து என்ற பெயரால், ஒரு பெரும் ஆளுமை மரணித்து விட்டது. இதை நினைக்கும் போதெல்லாம் இதயம் கருகிக் போகிறது.

காரைநகர் ஐங்கரன் கடினங்களைக் கச்சிதமாகக் கடந்து சென்ற பேராளுமை.

அவனின் இழப்பை இன்னமும் ஜீரணிக்க முடியவில்லை.

மனித நேயத்தை தன் அணிகலனாகக் கொண்ட ஐங்கரன் நட்பின் அடையாளம். எல்லோரையும் மதிக்கின்ற பண்புடைமையின் சொந்தக்காரன்.

உண்மை. ஆபத்பாந்தவனுக்கு ஐங்கரன் என்றொரு பெயரில்லை.

ஆனால் எங்கள் ஐங்கரன் ஆபத்பாந்தவன். யார் எந்த உதவியைக் கேட்டாலும் அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தன் நேரத்தின் பெரும் பகுதியைத் தியாகம் செய்தவன்.

25 வருடங்களுக்கு முன்னர் வலம்புரியில் அவனைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது.

காரைநகர் முழுமைக்கும் வலம்புரியின் ஊடகப் பணியை எடுத்துச் சென்றான்.

அவனின் ஊடகப் பணி என்பது, அநீதியை எதிர்ப்பதற்கானது. ஏழைகளுக்கு உதவுவதற்கானது.

"கொம்பன்" என்ற புனை பெயரில் அவன் எழுதிய கட்டுரைகளின் கனதி இன்னமும் எம் நெஞ்சிடை நிழலாடுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமாப் பட்டத்தை நிறைவு செய்த ஐங்கரன் இந்தியாவின் தமிழகத்தில் உள்ளகப் பயிற்சியை மேற்கொண்டான். அங்கு சென்னைப் பல்கலைக் கழகம், "சீ" தமிழ் தொலைக் காட்சி, தீக்கதிர் நாளிதழ் ஆகியவற்றில் அவன் பெற்றுக் கொண்ட உள்ளகப் பயிற்சிகள் ஊடகத்துறையிலான அவனின் ஆற்றலை மேலும் பரிணமிக்க வைத்தது.

ஊடகங்களை மதிப்பீடு செய்கின்ற அவனின் பேராற்றல் கண்டு நாம் வியந்த சந்தர்ப்பங்கள் ஏராளம்.

அது மட்டுமல்ல, எத்தகு பதவிநிலையில் உள்ளவர்களையும் தன் நட்பு வட்டத்திற்குள் ஆட்கொண்டு விடுகின்ற ஆற்றல் ஐங்கரனின் தனிச் சிறப்பு எனலாம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்ற ஐங்கரன் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் உரிமைகளை நிலை நிறுத்துவதற்காக அச்சமின்றிக் குரல் கொடுத்தான். வட மாகாண சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவராக இருந்து அவன் முன்வைத்த கருத்துக்கள் சபை ஏறின.

எதையும் வெளிப்படையாகக் கதைக்கின்ற ஐங்கரன் அநீதிகளை எதிர்க்கவும் நீதியை மதிக்கவும் ஒருபோதும் பின்னிற்கவில்லை.

ஆம், ஒரு நேர்மையாளனாக, இறை நம்பிக்கை கொண்டவனாக, செயல் வீரனாக எங்களோடு வாழ்ந்த ஐங்கரன் இன்றில்லை என்ற வேதனையோடு, அவனின் தூய்மையான ஆத்மா எல்லாம் வல்ல வாரிவளவு விநாயகனின் பொற்பாதங்களில் நித்திய பேரின்பம் அடையப் பிரார்த்தித்து அவனுக்கு இறுதி விடை கொடுக்கின்றோம்.

- என்.விஜயசுந்தரம்

# மே. இந்திய தீவுகள் அசத்தல் தொடரை இழந்த தென்னாபிரிக்கா




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 ஆவது ரி-20 போட்டியில் மே. இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றுள்ளதுடன் தொடரையும் தனதாக்கியது.

மே.இந்திய தீவுகள்- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே முடிந்த முதல் போட்டியில் மே. இந்திய தீவுகள் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் 2ஆவது போட்டி இந்திய நேரப்படி நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றது. முதலில் பட்டிங் செய்த மே.இந்திய தீவுகள் அணி 179 ரன்கள் குவித்தது.

தொடக்க வீரர் அதானஸ் 21 பந்தில் 28 ரன்கள் சேர்த்தார். ஷாய் ஹோப் 22 பந்தில் 41 ரன்கள் விளாசினார். கப்டன் ரோவ்மேன் பொவேல் 22 பந்தில் 35 ரன்களும், ரூதர்போர்டு 18 பந்தில் 29 ரன்களும் சேர்த்தனர்.

தென் ஆபிரிக்கா அணி சார்பில் வில்லியம்ஸ் அதிகபட்சமாக 4 ஓவரில் 36 ரன்கள் விட்டுக் கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 180 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களம் இறங்கியது.

தொடக்க வீரர் ரிக்கெல்டன் 13 பந்தில் 20 ரன்களும், ஹென்ரிக்ஸ் 18 பந்தில் 44 ரன்களும் எடுத்து நல்ல தொடக்கம் கொடுத்தனர்.

அடுத்து வந்த கப்டன் மார்கிராம் 9 பந்தில் 19 ரன்களும், ஸ்டப்ஸ் 24 பந்தில் 28 ரன்களும் அடித் தனர்.

ஒரு கட்டத்தில் அதாவது ஸ்டப்ஸ் ஆட்டமிழக்கும்போது தென்னாபிரிக்கா 13.5 ஓவரில் 129 ரன்கள் எடுத்திருந்தது.

அதன்பின் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழக்க 149 ரன்களில் சுருண்டது.

மே.இந்திய தீவுகள் அணியின் ஷெப்பர்டு 4 ஓவரில் 15 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட் கைப்பற்றினார்.

மற்றொரு பந்து வீச்சாளர்கள் ஷமர் ஜோசப் 4 ஓவரில் 31 ரன்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார். (நி-6)

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து டேவிட் மாலன் ஓய்வு




இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் டேவிட் மாலன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுள்ளதாக அறிவித்துள்ளார்.

மூன்று வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் சதம் அடித்த இங்கிலாந்தைச் சேர்ந்த இரண்டு வீரர்களில் இவரும் ஒருவர் ஆவார்.

இருப்பினும் கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற 50 ஓவர் உலகக் கிண்ணத்திற்குப் பிறகு அவர் இங்கிலாந்து அணியில் இடம்பெறவில்லை.

மேலும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரிலிருந்து அவர் நீக்கப்பட்டதன் பின்னர் தனது முடிவை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி டேவிட் மாலன் 22 டெஸ்ட் போட்டிகளில் 1,074 ஓட்டங்களையும், 30 ஒருநாள் போட்டிகளில் 1,450 ஓட்டங்களையும் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகளில் 1,892 ஓட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தங்க ரதம்

பொங்குகிற ஒளிவீசிப் புதுமைகொள்ளும்
பொன்னான ரதம் அதனில் வேலாய் ஏறி
திங்களதன் முழுமதியாய்த் திகழ்ந்து செல்ல
திசையெல்லாம் மயங்கிடுமாம் தேவர்கூட
தங்களது தலைவனவன் கைவேல் தன்னைத்
தாம் மகிழ்ந்து கண்டிடவே தரணி சேர்வார்
செங்கதிராய் எழுந்தே வேல் தேற்றம் செய்யும்
திருநாளாம் இந்நாளுக்கிணையும் உண்டோ?

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

## விசேட பேருந்து சேவைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர், தீர்த்த உற்சவத்தினை முன்னிட்டு தீவுப்பகுதியில் இருந்து செயலாற்றும் பேருந்துகள், இ. போ.ச. (வடக்கு) சகல பாதைகளிலும் செயலாற்றும் பேருந்துகள் மற்றும் யாழ்.சாலையின் பேருந்துகள் யாவும் புறப்படும் இடங்களில் இருந்து நல்லூர் ஆலயம் வரை செயலாற்றும் திகதி தேர்-01.09.2024, தீர்த்தம்-02.09.2024 என இ.போ.ச (வட) யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

## உச்சத்தைத் தொட்ட இஞ்சியின் விலை

(கொழும்பு)

இஞ்சியின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாகப் பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது சந்தையில் ஒரு கிலோகிராம் இஞ்சியின் விலை 3,200 ரூபாயாக உயர்வடைந்துள்ளதாக நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-6)




## நல்லைக் கந்தவேளே!

குன்றத்தில் மேவியே குவலையம் யாவையும்
கோணாமற் பேணுமாட்சி
நின்றுநீ செய்வதால் நின்கருணை பெய்வதால்
நேராது இங்கு வீழ்ச்சி
அன்றுமுதல் இன்றுமே யகிலஞ் செழிக்கவே
ஆற்றுமுன் னழகுமாட்சி
என்றுமே தேயாது வெப்போது மோயாது
எழுநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

## கந்தனை என்றும் நினை

கந்தனை நினைந்து காலையிலும் மாலையிலும்
கனிவோடு கரம்கூப்பு கண்கள் நீர்பனிக்கும்
சிந்தையிலே இருத்தி சூடமதை ஏற்றி
சேயாகி மனமுருக வேண்டுவது கிடைக்கும்
விந்தை மிகு வேலவன் வேலோடு மயிலமர்ந்து
வருந்தும் மனங்களுக்கு அவனருள் மகிழ்வாகும்
எந்தநிலை வந்தாலும் ஆறுமுகா என்றாலே
ஆறுதலை தருகின்ற ஔடதமும் அவன் தானே.

கலாபூஷணம்,
கே.ஆர்.திருத்துவராஜா.

## சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் இலங்கை வருகை




(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களுடனான முதலாவது குழு இலங்கை வந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில், ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்களுடனான மற்றொரு குழுவும் இலங்கை வர உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர் குழுவொன்றும் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்கும் பணிகளில் பங்கேற்பதற்காக இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இந்த குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-6)

## இராசிபலன்

29.08.2024
ஆவணி 13, வியாழக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 4.44 மணிவரை

திருவாதிரை முன்னிரவு 8.40 மணிவரை
சுபநேரம் -7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை

ஏகாதசி விரதம்,
சந்திராஷ்டமம் -
சுவாதி, விசாகம்.

வளவன்

**மேஷம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பணப்புளக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளும் ஏற்படலாம்.

**துலாம்** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான நாள்.

**ரிஷபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வேலைச் சுமை கூடும், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**கும்பம்** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இனிமையான நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் நிறைவேற்றுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றத்திற்கு உதவியவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளமையில் சூதாடுபவர்கள் முதுமையில் பிச்சையெடுப்பார்கள்.**

# 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' நல்லூரில் விழிப்புணர்வு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

"நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி" எனும் தொனிப் பொருளில் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்காட்சி நல்லூர் ஆலய முன்றலில் உள்ள யாழ். மாநகர சபை தீயணைப்பு படை வளாகத்தில் ஆரம்பமாகியுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தின் வடமாகாண நீர் பாதுகாப்பு செயற்றிட்டமும் (WASPAR), இளைய நீர்த் துறையாளர் வட்டம் (YWP) ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடமாகாண நீர்ப் பாசனத் திணைக்களம், நீர்வளச் சபை உள்ளிட்ட பல்வேறு நீர் சார்ந்த அரச திணைக்களங்களும், அமைப்புகளும் இணைந்து இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள குறித்த கண்காட்சியில் நீர் சார்ந்த ஆய்வு விபரங்கள், விஞ்ஞான விளக்கங்கள், கலந்துரையாடல்கள், விளையாட்டுகள், இளையோர்கள், சிறார்களுக்கான போட்டிகள் என பலவகையான நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (நி-6-33)



நல்லூர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 20 ஆம் திருவிழாவான நேற்று புதன்கிழமை காலை சந்தான கோபாலர் உற்சவத்தின் போது பட்டித்திருவிழாவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்-சிவசாந்தன்)

# வவு.குடிவரவு குடியகல்வு முன்பாக குழப்பநிலை

## பொலிஸார் கடமையில்


(குருமன்காடு)

வவுனியா, மன்னார் பிரதான வீதியில் அமைந்துள் பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் முன்பாக நேற்று ஏற்பட்ட அசாதாரண நிலமையினையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு முன்பாக கடந்த ஐந்து நாட்களாக வரிசையில் நின்றும் தமக்கும் இதுவரை கடவுச்சீட்டு கிடைக்கப் பெறவில்லை என தெரிவித்து திணைக்கள காரியாலயம் முன்பாக நின்ற மக்களால் குழப்ப நிலமை ஏற்பட்டது.

அதனையடுத்து வவுனியா பொலிஸார் அவ்விடத்திற்கு வரவழைக்கப்பட்டு அவ்விடத்தில் நிலவிய அசாதாரண நிலமையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளை திணைக்கள வாயில் முன்பாக வரவழைத்து வரிசையில் நின்ற மக்களுக்கு தற்போதைய நிலமை தொடர்பில் தெளிவூட்டல் வழங்கப்பட்டமையினையடுத்து நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

கடவுச்சீட்டினை இன்று பெறுவதற்காக மக்கள் தொடர்ச்சியாக வரிசையில் காத்திருக்கின்றமையுடன் சாதாரண சேவையின் கீழ் மார்ச் மாதம் விண்ணப்பித்து கடவுச்சீட்டு பெறாதவர்கள், வெளிநாட்டியிலிருந்து வருகை தந்தவர்கள் மீண்டும் நாட்டிற்கு செல்வதற்கு கடவுச்சீட்டு காலாவதியானவர்கள், மாணவர்கள்,



சகோதரங்களின் திருமணத்திற்கு செல்லவுள்ளவர்கள், வெளிநாட்டிற்கு வேலை வாய்ப்பு ஆவணம் கிடைத்தும் கடவுச்சீட்டு இல்லாதவர்கள் என பலரும் இவ் வரிசையில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

# பவள விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளின் பவளவிழாவும் "அறம் பாலிக்கும் ஞான மோகனம்" நூல் வெளியீடும் நாளை மறுதினம் சனிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் குறித்த பண்பாட்டு பேரவையின் தலைவர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி கிழக்கு பிரதேசசபையின் புத்தூர் பொது நூலகத்தினால் வீட்டுத் தோட்டம் மற்றும் வீடு நூலகம் வைத்திருப்போரையும் ஊக்குவிப்பதற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

எனவே புத்தூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பங்கு பற்ற விரும்புவோர்கள் எதிர்வரும் 15.9.2024 ஆம் திகதிக்கு முன்னர் நூலகர், பொது நூலக நிலையம் புத்தூர் எனும் முகவரிக்கு சுய விபரக் கோவையை விண்ணப்பிக்குமாறு வலி கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொது நூலகர் அறிவித்துள்ளார். (நி-6)



பழனியில் முத்தமிழ் முருகன் மாநாடு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழக இந்து அறநிலைத்துறை அமைச்சரினால் கலாநிதி. ஆறு.திருமுருகனுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# உணவகங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கை

(சாவகச்சேரி)

நாச்சிக்குடாப் பகுதியில் பிரதேச பொது சுகாதார பரிசோதக அதிகாரிகளால் அண்மையில் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது உணவு கையாளும் நிலையமொன்றில் பிளாஸ்ரிக் தட்டுகளில் இடியப்பம் அவிக்கத் தயார் நிலையில் இருந்தமை மற்றும் சமைத்த உணவுப்பொருட்கள் மாசுறக்கூடிய நிலையில் இருந்தமை மற்றும் கழிவுநீர் திறந்த நிலத்தில் வெளியேறியமை கண்டுபிடிக்கப்பட்டது.

இனங்காணப்பட்ட சுகாதார சீர்கேடுகளுக்காக சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவபூதராயர் பெருமானின் அலங்கார உற்சவம் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்களுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடை பெறவுள்ளன.

இந்நிலையில் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகக் கிரியைகளுடன் ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மாலை 6 மணிக்கு வசந்தமண்டப பூசையும் திருவூஞ்சல் நிகழ்வும் இடம்பெற்று சுவாமி வீதி வலம் காட்சி இடம்பெறவுள்ளது. (நி-6)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வியாழக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள வயலினிசை நிகழ்வில் வயலின் கேதீஸ்வரி யஷோதரன், மிருதங்கம்- ப.விக்னேஸ்வரன், கஞ்சிரா-சு. கார்த்திகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15-8.5 மணிவரை இடம்பெறவுள்ள பொன்னாலை சந்திரபரத காலாயத்தின் நடன அரங்கு திருமுறை ஆடல் நிகழ்வில் நட்டுவாங்கம்-ஸ்ரீதேவி கண்ணதாசன், மிருதங்கம்-ம. லோகேந்திரன், பாட்டு ச. [illegible], வயலின்- சே. [illegible] ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# வர்த்தகர் ஒருவருக்கு 1 1/2 லட்சம் ரூபாய் தண்டம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் கிருமிநாசினிகளை இறக்குமதி செய்து, விற்பனை செய்து வந்த வர்த்தகர் ஒருவருக்கு ஒன்றை இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் சட்டவிரோதமான முறையில் களை, கிருமிநாசினிகளை விற்பனை செய்யப்படுவதாக விவசாய திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த வர்த்தக நிலையத்தில் சோதனையிடப்பட்டது.

அதன் போது, குறித்த வர்த்தக நிலையத்தில் இருந்து ஒரு தொகை சட்டவிரோத கிருமிநாசினிகள் மீட்கப்பட்டது.

அதனை அடுத்து வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் வர்த்தகர் குற்றத்தினை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சரிவு அபாய பகுதிகளில் 1,386 குடும்பங்கள்

## தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் 1,386 குடும்பங்கள் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிப்பதாகத் தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் மண்சரிவு அபாயம் உள்ள 20 பிரதேச செயலகப் பிரிவுகளில் 1845 குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் 19 பிரதேச செயலகப் பிரிவுகளில் 231 குடும்பங்கள் மாத்திரமே கடந்த வருடம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# மத்திய கிழக்கில் பதற்றம் எண்ணெய் விலையில் மாற்றம்

(வோஷிங்டன்)

காசா போரில் போர் நிறுத்த ஒப்பந்தம் சாத்தியப்படாத நிலையில் இஸ்ரேல்-ஹிஸ்புல்லா மோதல் மற்றும் ஈரானுடன் நடந்து வரும் போர் ஆகியவை மத்திய கிழக்கில் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகின்றன.

இதன் நேரடித்தாக்கமாக, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் ஒப்பீட்டளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பிரண்ட் கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை ஏறக்குறைய 80 டொலர் விலையில் பதிவாகியுள்ளது. அமெரிக்க WTI எண்ணெய் பரல் ஒன்றின் விலையும் 75.50 டொலர்களை தாண்டியுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் எண்ணெய் சீர்குலைவு அபாயம் மற்றும் அமெரிக்க மத்திய ரிசர்வ் வட்டி விகிதங்களைக் குறைக்கும் சாத்தியக்கூறு ஆகியவை உலக சந்தையில் எண்ணெய் விலை உயர்வை பாதித்துள்ளது.

ஆனால், சீனா உள்ளிட்ட முக்கியப் பொருளாதாரங்களில் ஏற்பட்டுள்ள மந்தநிலையால், எண்ணெய் தேவை கணிசமாக அதிகரிக்கவில்லை.

அமெரிக்கா உள்ளிட்ட முக்கிய எண்ணெய் நுகர்வு நாடுகளில் எண்ணெய் இருப்பில் சரிவு ஏற்பட்டுள்ளதாக தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் விலை உயர்வைத் தக்கவைக்க தற்போதைய உற்பத்திக் குறைப்பைத் தொடர வேண்டுமா என்பது குறித்து ஒபெக் அமைப்பு அடுத்த வாரம் முடிவு செய்ய உள்ளது. (நி-6)

# முதல் மின் உற்பத்தி நிலையம் திறப்பு

(கொழும்பு)

திரவ இயற்கை எரிவாயுவை முதன்மையாகப் பயன்படுத்தி இயங்கும் இலங்கையின் முதல் மின் உற்பத்தி நிலையமான 350 மெகா வோர்ட் திறன் கொண்ட கெரவலப்பிட்டி 'சொபாதனவி' ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையத்தின் சுழற்சிக் கட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்துள்ளார்

அதன்படி இது இலங்கையின் எரிசக்தி துறையில் ஒரு தனித்துவமான மைல்கல் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# ஐஸ் போதைப் பொருளுடன் ஆறு இளைஞர்கள் கைது

(நெளுக்குளம்)

உடையார்கட்டு குரவில் பகுதியில் ஐஸ் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த இளைஞர்கள் 6 பேரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

கைது சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு குரவில் பகுதியிலுள்ள யாருமற்ற வீடொன்றில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் சார்ஜன் குணவர்த்தனவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையில் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த இளைஞர்களிடமிருந்து 7 தொலைபேசிகளும், பதினேழாயிரம் ரூபாய் பணம் என்பவற்றுடன் சிறு சிறு 7 பொதிகளில் 90 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 17, 18, 21, 23, 24 வயதுடைய இளைஞர்கள் உடையார்கட்டு குரவில் பகுதியினைச் சேர்ந்த நால்வர் , புதுக்குடியிருப்பு பகுதியினைச் சேர்ந்த இருவர் உள் ளிட்ட 6 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞர்களிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலி ஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-6-299)


## காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம்-460) 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

எனது இல:- KR/DS/LB/ACQ/1784/504/BP
காணி அமைச்சின் இல:- 03/J/86/D/26

கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கம் எடுத்துள்ளதால் இதற்குரிய நட்டஈட்டுப்பணம் கீழ் கண்டவாறு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கிலக்கத்தின் கீழ் வைப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2003ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 1292/23 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிக்கையினை பார்க்கவும்.

அட்டவணை

| தொடர் இல | பிபியா 1914 ஆம் இலக்க நில அளவை வரைபடத்திலுள்ள காணித்துண்டுகள் | வழக்கு இலக்கம் | ஆரம்ப நட்ட ஈட்டுத்தொகை |
|---|---|---|---|
| 01 | 124 | Land/211/2024 | 1000.00 |

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
காரைநகர்.

(சி-1069)

## Invitations for Bids (IFB)

### KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA)
3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
4. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road Kilinochchi (T.P No : 0212285761, Fax No : 0212285690)** and inspect the bidding documents at the address given below **from 29.08.2024 until 12.09.2024 During 9.00 am to 2.00 pm** on Normal Working Days.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi, from 29.08.2024 until 12.09.2024 from 9.00 am to 2.00 pm**. Upon payment of a non-refundable fee as mention below table. The method of payment will be **by cash**.
6. Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Local Authority Procurement Committee (LAPC), Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** on or before **2.00 pm** on **12th September 2024** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. All bids shall be accompanied by a "Bid-Security, as in the table below.
8. The pre-bid meeting will be held on **05.09.2024** at **10.00 am** at the **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi**.

Table -

| S.No | BID No. | Name of the Work | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security | | ICT AD Grade Required (Highways) | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable Fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs). | Validity Period | | | | |
| 2 | NP/KN/KPS /2024/ Stamp Duty/01 | Re-Construction of Medras Road Stage-IV | 1.97 | 20.000.00 | 2024.11.28 | C9 Or C8 | 2024.10.31 | 3 Months | 3500.00 |

The address referred to above is (are):

**Chairman,**
Local Authority Procurement Committee (LAPC )
Karachchi Pradeshiya Sabha, Kilinochchi.

29.08.2024

(C-1071)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் மோடி சிங்கப்பூர் விஜயம்

(டில்லி)

பிரதமர் மோடி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சிங்கப்பூருக்கு செல்ல உள்ளார்.

இந்தியா, சிங்கப்பூர் அமைச்சர்கள் அளவிலான உயர்மட்ட சந்திப்பு கூட்டம் சிங்கப்பூரில் நடந்தது. இதில், இந்திய தரப்பில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், வர்த்தகம், தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர் கொண்ட குழு பங்கேற்றது.



இக்கூட்டம் நிறைவடைந்த பின்னர் கருத்து வெளியிட்ட சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், குறித்த கலந்துரையாடல் ஆக்கபூர்வமானதாக இருந்ததாகவும்,

மேலும் பிரதமர் மோடியின் சிங்கப்பூர் பயணத்துக்கு களமாகவும் அமைந்ததாகவும் தெரிவித்தார். பிரதமர் மோடி விரைவில் சிங்கப்பூருக்கு வர உள்ளார். அவரது பயண திகதி இன்னும் இறுதியாகவில்லை என்று குறிப்பிட்டார். (நி-6)

# ரஷ்யாவின் 100 குடியேற்ற பகுதிகளை கைப்பற்றிய உக்ரைன் இராணுவம் 600 ரஷ்ய வீரர்கள் அதிரடி கைது

(மொஸ்கோ)

உக்ரைன், ரஷ்யா போர் தீவிரமாகி வரும் நிலையில் ரஷ்யாவின் கூர்க்ஸ் பிராந்தியத்தில் மக்கள் வாழும் 100 குடியேற்றப் பகுதிகளை கைப்பற்றியுள்ளதாகவும் 600 ரஷ்ய வீரர்களைக் கைது செய்துள்ளதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 2022 இல் தொடங்கி கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இந்தப் போரில் சமீப காலமாக உக்ரைன் ரஷ்யா மீது பெரிய அளவிலான தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது.

கடந்த ஒகஸ்ட் 6 ஆம் திகதி முதன்முறையாக ரஷ்யாவுக்குள் நுழைந்த உக்ரைன் படைகள் கூர்க்ஸ் பிராந்தியத்தில் சாரமாரியாகத் தாக்குதல் நடத்தின. இதனால் அங்குள்ள மக்கள் வெளியேற்றப்பட்டு ரஷ்ய இராணுவம் குவிக்கப்பட்டது.



இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ரஷ்ய மண்ணில் வெளிநாட்டுப் படைகள் முன்னெடுத்த மிகப்பெரிய தாக்குதலாக இது பார்க்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் குறித்து விளக்கமளித்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, எல்லையிலிருந்து ரஷ்யா நடத்தும் தாக்குதலை நிறுத் துவதற்காகத்தான் இந்த முயற்சி. இரு நாட்டு எல்லைக்குள் இடையில் ஒரு பாதுகாப்பான மண்டலத்தை உருவாக்குவதற்குத்தான் இந்த தாக்குதல். மற்ற எந்த நோக்கமும் கிடையாது என்று தெரிவித்தார்.

ஆனால் உக்ரைன் படைகள் ரஷ்ய பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் குற்றம்சாட்டியிருந்தார்.

உக்ரைன் படைகளை எதிர்கொள்ள தற்போது 30,000 ரஷ்ய இராணுவ வீரர்கள் கூர்க்ஸ் பிராந்தியத்தில் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உக்ரைன் படைகளைச் சுற்றி வளைத்துப் பாதுகாப்பு அதற்கு மேல் அவர்கள் முன்னேற முடியாதபடி பாதுகாப்பு வளையத்தை உருவாக்க முயன்று வருகின்றனர்.

இந்த நிலையில்தான் உக்ரைன் தரைப்படை தளபதி சிர்ஸ்கி கூர்க்ஸ் பிராந்தியத்தில் இறுதிவரை நடத்திய தாக்குதல்களில் 600 ரஷ்ய படை வீரர்களைக் கைது செய்துள்ளோம் என்றும் 100 குடியிருப்பு பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட பகுதிகளில் ரஷ்யா நூற்றுக்கணக்கான மிசைல்கள் மற்றும் ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. உக்ரைனின் மின்சார சேவை கட்டமைப்பை அழிக்க ரஷ்யா குறி வைத்து வருகிறது. மேலும் உக்ரைன் படைகளும் ரஷ்யாவின் சராதோவ் பகுதியில் ட்ரோன்களை ஏவித்தாக்குதல் தாக்குதல் நடத்தின. (நி-6)

# ஷான்ஷன் புயல்

## ஜப்பானுக்கு எச்சரிக்கை


### இடைநிறுத்தப்பட்ட முக்கிய சேவைகள்

(டோக்கியோ)

ஷன்ஷான் புயல் குறித்து ஜப்பானுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த புயல் தற்போது ஜப்பானின் அமாமி ஓஷிமா தீவுக்கு அருகில் கடல் வழியாக நகர்வதாகவும், அது இவ்வாற இறுதியில் மிகவும் வலுவான புயலாக உருவாகலாம் எனவும் ஜப்பான் வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கியூஷூ மற்றும் அமாமி ஆகிய பகுதிகளில் மணிக்கு 162 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




மேலும் அடுத்த 24 மணி நேரத்தில் ஜப்பானின் சில பகுதிகளில் 300 முதல் 400 மில்லிமீற்றர் அளவில் கடும் மழை பெய்யக்கூடும் என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த நிலையில் குறித்த பகுதிகளில் இன்று முதல் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

கணிக்க

எச்சரி



இது தொடர்பாக ஈரானிய இராணுவ அதிகாரிகள் தரப்பு தெரிவிக்கையில், எப்போது வேண்டுமானாலும் தாக்கப்படலாம் என்ற பதற்றத்

# பிரபஞ்சத்தி

## 500 ட்ரில்லியன் ம

### வாயடைத்த விஞ்

பிரபஞ்சத்தில் சூரியனை விட 500 ட்ரில்லியன் மடங்கு பிரகாசமான ஒளிரும் பொருளை வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஐரோப்பிய தெற்கு ஆய்வகத்தின் [ESO] VLT எனப்படும் மிகப் பெரிய தொலைநோக்கி மூலம் இதை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுவரை எங்கும் கண்டிராத அளவுக்கு இது மிகவும் பிரகாசமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மத்தியில் கருந்துளைகளைக் கொண்டு விண்மீன் திரள்கள் சூழ்ந்த இவ்வகையாக ஒளிர்வது குவாசர்ஸ் என்று அழைக்கப்படுகிறது. மத்தியில் உள்ள கருந்துளைகளால் குவாசர்ஸ் இயக்கப்படுகிறது. இந்த கருந்துளைகளில் வாயு மற்றும் தூசிகள் அண்டும்போது மின்

காந்
இது
குக்
ளது.
வகை
மான
ளது.
இ
மாக
விஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிக்கு பழி...

## க்கமுடியாத அளவில் இருக்கும்!

## ரிக்கை விடுத்த ஈரான்...



(டெஹ்ரான்)

**ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் படுகொலைக்கு பழி தீர்ப்பது உறுதி என தெரிவித்துள்ள ஈரான், எவரும் கணிக்க முடியாத வகையில் அது இருக்கும் எனவும் அறிவித்துள்ளது.**


ப இரா
தரிவிக்
மானா
தற்றத்

திலும் பீதியிலும் தற்போதைக்கு இஸ்ரேல் இருக்கட்டும் ஆனால் பதிலடி என்பது கணிக்க முடியாத தாக இருக்கும் என்பது மட்டும் உறுதி என தெரிவித்துள்ளனர்.

டெஹ்ரானில் ஜுலை 31 ஆம் திகதி ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே படு கொலை செய்யப்பட்டார்.

ஆனால் இந்த விவகாரத்தில் இதுவரை இஸ்ரேல் பொறுபேற்கவோ மற்றும் மறுக்கவோ இல்லை.

இருப்பினும் ஈரான் மற்றும் அதன் பிராந்திய நட்பு நாடுகள் இஸ்மாயில் ஹனியாவின் படுகொலைக்கு காரணம் இஸ்ரேல் என்றும் மற்றும் பழிவாங்க வேண்டும் என்றும் சபதமெடுத்துள்ளது.



இதனிடையே, கடந்த வாரம் ஈரானின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவிக்கையில் இஸ்மாயில் ஹனியாவின் படுகொலைக்கு இஸ்ரேலைப் பழிவாங்குவது என்பது தீவிரமான திட்டமிடலுக்கு அடுத்தே முன்னெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்காவின் பென்டகன் தெரிவிக்கையில், உளவு அமைப்புகள் திரட்டியுள்ள தரவுகளின் அடிப்படையில் இஸ்ரேல் மீதான ஈரான் அல்லது ஹிஸ்புல்லாவின் தாக்குதல் அச்சுறுத்தல் நீடிப்பதாகவே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## த்தில் சூரியனை விட
### பன் மடங்கு பிரகாசமான பொருள்
### விஞ்ஞானிகள்

விட
ரகாச
னிய
ர்.
தின்
ரிகப்
லம்
ள்ள
ராத
மாக
னர்.
ளக்
கள்
வது
ப்படு
ளை
றது.
மற்
மின்

காந்த கதிர்வீச்சு வெளிப்படுகிறது. இதுவே அதன் ஒளிரும் தன்மைக்குக் காரணமாக அமைத்துள்ளது. இந்த நிலையில்தான் இதுவரை கண்டறியப்படாத பிரகாசமான குவாசர் கண்டறிய்ப்பட்டுள்ளது.

இந்தக் குறிப்பிட்ட குவாசர் வேகமாக வளர்ந்து வருகிறது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித் துள்ளனர்.

சூரியனை விட 500 ட்ரில்லியன் மடங்கு பிரகாசமுடைய இந்த குவாசருக்கு J0529-4351 என்று பெயரிடப்பட்டுள்ளது இந்த குவாசர் பூமியிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால், அதன் ஒளி நம்மை வந்தடைய 12 பில்லியன் ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக் கொண்டதாக வானியலாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-6)



## அரிசிக்கு அவதிப்படும் ஜப்பான் மக்கள்



(டோக்கியோ)

ஜப்பானில் இதுவரை இல்லாத அளவிற்கு அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசிப் பற்றாக்குறை விரைவில் தீர்க்கப்படும் என அந்நாட்டு அரசு உறுதி அளித்துள்ளது. நிலநடுக்கம், சுனாமி, சூறாவளி [illegible] நாடுகளில் ஜப்பான் முத லிடத்தில் உள்ளது. தற்போது அங்கு உணவு, தானியப் பற்றாக் குறையும் ஏற்பட்டுள்ளது.

அங்கு உருவாகியுள்ள அரிசி தட்டுப்பாடு, அரசுக்கும், மக்களுக்கும் பெரும் தலைவலியாக மாறி உள்ளது. வரும் சில நாட்களில் நில நடுக்கம் மற்றும் சூறாவளி ஏற்படும் என ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். இது பற்றிய தகவல்கள் சமூக ஊடகங்களிலும், தொலைக் காட்சிகளிலும் வேகமாக பரவின.

இதனால் அச்சம் அடைந்த மக்கள் அனைவரும் வீட்டில் அரிசியை வாங்கி குவித்து வைத்திருப்பதும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாக மாறிவிட்டது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்தது அரிசி தட்டுப்பாட்டிற்கு மற்றொருகாரணமாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக, ஜப்பான் விவசாயத்துறை அமைச்சர் டெட்சுஷி சகாமோடா கூறியதாவது, அரிசி பற்றாக்குறை நிலைமை விரைவில் தீர்க்கப்படும். அதுவரை மக்கள் அமைதியாக இருக்க வேண்டும். செப்ரெம்பர் இறுதிக்குள் 40 சதவீதம் அறுவடை பணி நடைபெறும். புதிய அறுவடைக்காலம் வந்து விட் டால் பற்றாக்குறை தீர்ந்து விடும் எனத் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் வெப்பம்; தோல் நோய் ஏற்பட வாய்ப்பு

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)** நாட்டில் தற்போது அதிகரித்து வரும் வெப்பநிலையினால் தோல் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்திய சாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளதாவது,

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வெப்ப நிலையினால் குழந்தைகளிடையே தோல் நோய் பிரச்சினைகள் மிகவும் பொதுவான ஒன்றாக உள்ளது.

அதிகரிக்கும் வெப்ப நிலையினால் தோல் நோய்கள் ஏற்படுவதோடு, உடலில் நீர்ச்சத்து குறைபாடு அதிகரிக்கும் என்றும் அதிக சூரிய ஒளி படும் இடங்களில் இருப்பதை தவிர்ப்பதோடு, அதிகளவு தண்ணீர் பருக வேண்டும்.

மேலும் செயற்கையான குளிர் பானங்களை அருந்துவதை தவிர்த்து இயற்கையான தண்ணீர், எலுமிச்சைச்சாறு, இளநீர் போன்றவற்றை பருக வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிப்பாட்ட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.(நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 220 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150 | 150 | 200 |
| தக்காளி | 250 | 300 | 250 | 240 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 280 | 180 | 150-200 | 200 |
| கோவா | 250 | 340 | 250 | 350 | 300 |
| கரட் | 250 | 320 | 350 | 350 | 320 |
| பூசணி | 80 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 80 | 100 | 100 | 80 | 140 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 200 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 150-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 300-350 | 300 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 150 | 240 |
| பயற்றங்காய் | 300 | 200 | 120 | 100-120 | 150 |
| லீக்ஸ் | 320 | 300 | 500 | 350 | 350 |
| பீற்றூட் | 100 | 160 | 150 | 200 | 150 |
| கறிமிளகாய் | 400 | 650 | 600 | 450 | 700 |
| முருங்கைக்காய் | 350 | 200 | 100 | 100-170 | 200 |
| போஞ்சி | 400 | 600 | 600 | 450 | 600 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 250 | — | 240 |
| கீரை – 1 பிடி | 120 | 120 | 50 | 60 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 | 250-300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 140 | 80-120 | 100-130 |
| இராசவள்ளி | — | 800 | 650 | 670 | 800 |
| வெங்காயப்பூ | 230 | 200 | 300 | — | 320 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | 100 | 70 | 100 | 60 | 100 |

# இன்று ஒரு தகவல் 222



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தகவல் ஜோசியம்

என்ன இன்று ஒரு தகவல் கேட்பதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறீர்களா? எதற்கு இப்படி கேட்கின்றேன் என்றால் இதுவரைக்கும் உங்களுக்கு தகவல் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். இன்றைக்கு உங்களுக்கு ஜோசியம் சொல்லப் போகின்றேன் நிஜமாகத்தான். நாடி ஜோசியம், ரேகை ஜோசியம் மாதிரி இது தகவல் ஜோசியம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

இதிலே நம்பிக்கை உள்ளவர்கள் மட்டும் வந்து ரேடியோவிற்கு முன்னாலே வந்து உட்காருங்கள். உற்றுப்பாருங்கள் நான் இங்கேயிருந்தபடியே உங்கள் முகத்தைப் பார்த்து பலன் சொல்லப் போகின்றேன்.

கவனமாகக் கேளுங்கள். நான் சொல்வதையெல்லாம் உங்களிற்குப் பொருத்தமாக இருக்கின்றதா? என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். பலன் சரியாக இருந்தால் ஒரு வரி எழுதிப் போடுங்கள். என்ன தயாரா? இதோ ஆரம்பிக்கின்றேன்.

நீங்கள் எப்படி என்றால் அடுத்தவர்கள் உங்களை விரும்ப வேண்டும், பாராட்டவேண்டும் என்கின்ற தேவை உங்களிடம் அதிகமாக இருக்கின்றது. நீங்கள் உங்களிடம் இருக்கின்ற நல்லது கேட்டதை அடிக்கடி நினைத்துப் பார்க்கின்றீர்கள். அப்படி சுயமாக விமர்சனம் செய்கின்ற தன்மை உங்களுக்கு உண்டு.

உங்களிடம் இருக்கின்ற திறமைகளிலே பலவற்றை நீங்கள் பயன்படுத்தி நன்மையடையாமல் வீணாக்கிக்கொண்டு இருக்கின்றீர்கள். என்ன சரி தானா? உங்களுடைய ஆளுமையிலே பல குறை இருந்தால் கூட பொதுவாக நீங்கள் அதற்கெல்லாம் வேறு வகையிலே ஈடு செய்து விடுகின்றீர்கள்.

வெளித்தோற்றத்திற்கு நீங்கள் ஒழுங்கு கட்டுப்பாடு உள்ளவராக தெரிகின்றீர்கள். இருந்தாலும் உள் மனது அப்படி இல்லை. பத்திரமில்லை என்கின்ற உணர்ச்சி இருக்கிறது. சஞ்சலம் இருக்கிறது.

அடிக்கடி உங்களுடைய முடிவுகளும் செயல்களும் சரியானவை தானா என்கின்ற சந்தேகம் உங்களிற்கு தீவிரமாக ஏற்படுவதுண்டு. நீங்கள் ஓரளவிற்கு மாற்றமும் புதுமையும் ஏற்பட வேண்டும் என ஆசைப்படுகின்றீர்கள். கட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும் உங்களை அடக்கி வைக்கின்ற போது உங்களுக்கு அதிருப்தி உண்டாகின்றது.

நாங்கள் சுயேட்சையாக சிந்திக்கக்கூடியவர் என்கின்ற நினைப்பு உங்களுக்கு உண்டு. மற்றவர்கள் சொல்லுவதை சரியான ஆதாரமில்லாமல் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். மற்றவர்களிடம் எங்களைப்பற்றி அளவிற்கு மீறி வெளிப்படையாக பேசுவது புத்திசாலித்தனம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்

நடைமுறைக்கு சாத்தியமில்லாத சில ஆசைகள் உங்களிடம் உண்டு. சுய பாதுகாப்பு என்பது உங்களுடைய முக்கியமன இலட்சியங்களிலே ஒன்று. சில சமயம் நீங்கள் மற்றவர்கள் எங்களிடம் வந்து சகஜமாக பழகிக்கொள்கின்ற அளவிற்கு நடந்து கொள்கின்றீர்கள்.

சில சமயம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கின்றீர்கள். தயங்குகின்றீர்கள், ஒதுங்கி போய் விடுகின்றீர்கள். என்ன இதுவரைக்கும் நான் சொல்லிக் கொண்டு வந்த ஜோசியம் எப்படி? உங்களிற்கு ஒத்துவருகிறதா? அப்படி ஒத்து வந்தால் உடனே என்னை பாராட்ட ஆரம்பித்து விடாதீர்கள். நீங்கள் பாராட்ட வேண்டியது Ross stagner ஐ அவர் ஒரு மனோதத்துவ நிபுணர்.

அவர் அமெரிக்காவிலே ஒரு உளவியல் சோதனையை நடத்தினார். அந்த அடிப்படையிலே தான் இப்போது நான் உங்களிற்கு பலன் சொன்னேன். எனக்கு ஜோசியமும் தெரியாது ஒன்றும் தெரியாது. விடயம் என்ன தெரியுமா? பொதுவாக மனிதர்கள் பாராட்டுக்களை விரும்புவார்கள். விமர்சனங்களை வெறுப்பார்கள். இதை மனதிலே வைத்துக் கொண்டு பலன் சொல்ல வேண்டும் அவ்வளவும் தான். நாம் சொல்வதிலே பெருமளவு சாதகமானதாகவும் லேசாக விமர்சிக்கின்ற மாதிரியும் இருக்க வேண்டும்.

மக்கள் நம்பி விடுவார்கள். ஒருவரை கருமி என்று சொல்வதை விட சிக்கனமானவர் என்று சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வார். அவர் ஊதாரியாக இருந்தால் பெரிய செலவாளி தான் இருந்தாலும் நல்ல விடயங்களிற்கு தான் செலவழிப்பீர்கள் என்று சொல்ல வேண்டும்.

சொல்கின்ற பலன் எல்லாம் பொதுப்படையானது தான். இருந்தாலும் தனக்கு உரியவையாக கண்டுபிடிக்கப்பட்டவை என்கின்ற பிரமையை கேட்கின்றவர்களுக்கு உண்டாக்க வேண்டும். அது தான் ஜோசியரின் சாமர்த்தியம்.

இந்த பிரமைக்கு உளவியலாளர் பார்னம் உத்தி என்று பெயர் வைத்திருக்கின்றார்கள். பீனியஸ் பார்னம் என்று ஒருவர். 19 ஆம் நூற்றாண்டிலே அமெரிக்காவிலே பிரபலயமாக இருந்த ஒரு சர்க்கஸ் கம்பெனியின் அதிபர். உலகத்திலே ஒவ்வொரு நிமிடமும் ஓர் ஏமாளி பிறந்து கொண்டே இருக்கின்றான் என்பது அவருடைய சித்தாந்தம்.

ஒவ்வொருத்தரையும் திருப்திப்படுத்துகின்ற அம்சங்களை கொஞ்சம் கொஞ்சமாக கலந்து கேளிக்கை நிகழ்சிகளை நடத்தியது தான் அவரது மகத்தான வெற்றிக்கு காரணமாம். அந்த உத்தியை அடிப்படையாக வைத்துத்தான் இன்றைக்கு பல பேர் இந்த உலகத்திலே ஒவ்வொரு கூட்டத்தையும் கூட்டிக்கொண்டு பிழைப்பு நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த ஒரு சாமியாருக்கு ஏகப்பட்ட தொண்டர்கள் பல பேர் அவரிடம் வந்து அருள் வாக்கு கேட்பார்கள். அவரும் சொல்வார். ஒரு நாள் ஒரு அம்மா கவலையோடு அவர் முன்னாலே வந்து நின்றார்.

இவர் அவர்களை பார்த்தவுடனே அம்மா கவலைப்படாதே சொல்லாமல் புறப்பட்டுப் போன உங்கள் வீட்டுக்காரன் சொல்லாமலே ஒரு நாள் வந்து சேருவான். தைரியமாக இரு என்று ஆசீர்வாதம் செய்தார். அந்த அம்மா போனவுடனே அவருடைய சீடன் அவரிடம் வந்து அது எப்படி சுவாமி அந்த அம்மாவின் வீட்டுக்காரர் சொல்லாமல் புறப்பட்டு போனான் என்கின்ற விடயத்தை அவ்வளவு சரியாக கண்டுபிடித்தீர்கள் என்று கேட்டான். அவளினுடைய தொந்தரவு தாங்க முடியாமல் தலைமறைவாகிய அந்த அப்பாவி நான் தான் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வாக்கு வலிமையை சர்வதேசத்திற்கு காண்பிப்போம்

## தமிழ் பொதுவேட்பாளர் தெரிவிப்பு

(அக்கராயன்)

சிங்களத் தலைவர்களிடம் இருந்து தமிழர்களுக்கான தீர்வு கிடைக்கப் போவதில்லை என தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார். கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில் பகுதிகளில் ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கையில் நேற்று பங்கேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரி வித் தார்.

சிங்களத் தலைவர்களினால் காலங்காலமாக தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதே வரலாறாக உள்ளது. இவ் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரான நான் போட்டியிட்டாலும் வெற்றி பெற்று ஜனாதிபதியாக வரப் போவதில்லை. ஆனால் ஒரு செய்தியை சிங்களத் தரப்பிற்கும் சர்வதேசத்திற்கும் எனக்கு அளிக்கப்படும் வாக்குகள் பலமான செய்தியை சொல்லும். அதுயாதெனில் தமிழ் மக்கள் ஓரணியில் நிற்கின்றார்கள் என்பதாகும். தமிழர்களுக்கு பிரச்சினைகள் உள்ளது என்பதை வெளியுலகத்திற்கு கொண்டு செல்ல முடியும். தமிழர்கள் அனைவரும் ஓரணியில் நின்று எனக்கு வாக்களியுங்கள் எனவும் தெரிவித்தர். (நி-6-350)

# வடக்கின் நீலங்களின்

## துடுப்பாட்ட சமர் நாளை ஆரம்பம்

(அக்கராயன்)

வடக்கின் நீலங்களின் சமர் எனப்படும் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகிய வற்றுக்கிடை யிலான துடுப்பாட்ட சமர் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாக வுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் முற்பகல் 8 மணிக்கு தொடங்க உள்ள முதல் நாள் நிகழ்வில் கிளிநொச்சி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகவும் இரண்டாம் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி முன்னாள் மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

குறித்த துடுப்பாட்ட சமரின் இறுதி நாள் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது. (நி-6-350)

# 'சிமிக் பூங்கா' திறந்து வைப்பு



(கிளிநொச்சி)


55ஆவது காலாட்படைப் பிரிவின் முயற்சியான "கிளிநொச்சி சிமிக் பூங்கா" இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே வால் உத்தி யோக பூர்வமாக கடந்த ஞாயிற் றுக்கிழமை திறந்து வைக்கப் பட்டது.

கிளிநொச்சி சமூகத்தின் கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், உள்ளூர் மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு அத்தியாவசிய வளங்கள் மற்றும் ஆதரவை வழங்குவதற்கும் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த பூங்காவில் இல வசவைபை, கற்றல் பகுதிகள், கழிவறைகள், சுத்தி கரிக்கப்பட்ட நீர் மற்றும் மின்சார வசதிகள் போன்ற அம்சங்களைக் கொண் டுள்ளதுடன் இவை அனைத்தும் சமூ கத்திற்கான கற்றல் சூழலை மேம் படுத்துவதற்காக வடி வமைக் கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (நி-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3208

### சனா





### மாதவன்




### மதுபாலா




### நிறோ




### கண்ணா




### தனுஸ்கா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 569





போனால் போகட்டும், பழுவேட்டரையரைப் பற்றிக் கேட்டீர். என் கணவரும், பார்த்திபேந்திரனும் பரிவாரங்களுடன் பக்கத்துக் கிராமத்துக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கே கண்ணகிக் கூத்தும், வேலனாட்டமும் நடைபெறுகின்றன. சின்ன இளவரசரைப் பற்றி வெறியாட்டக்காரனிடம் ஏதாவது தெரிந்து கொள்ள முடியுமா என்று பார்ப்பதற்காகப் போயிருக்கிறார்கள், பைத்தியக்காரர்கள்! யாரைக் கேட்க வேண்டுமோ அவரைப் பிடித்துக் கேட்காமல் ஜோசியக்காரனிடம் சென்றிருக்கிறார்கள். திரும்பி வருவதற்கு வெகுநேரம் ஆகும். ஆகையால் உம்மை நான் அழைத்துவரச் செய்தேன். ஐயா! மறுபடியும் கேட்கிறேன். இளவரசரைப் பற்றிய உண்மை உமக்குத் தெரியும் அல்லவா? அதை நீர் எனக்குச் சொல்லமாட்டீர் அல்லவா?"

"இல்லை தேவி! சொல்வதற்கில்லை! இனிமேல் எந்தக் காரியத்திற்கும் புனைந்துரைப்பதில்லையென்றும், உண்மையே சொல்வதென்றும் இன்றைக்குத்தான் தீர்மானம் செய்து கொண்டேன். ஆகையால் இளவரசரைப் பற்றிச் சொல்ல முடியாது. சற்று முன்னால் கூட என் தீர்மானத்தை மறந்து விட்டேன். மன்னிக்க வேணும்!" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் தன்னுடைய இடைக் கச்சின் சுருளை அவிழ்த்து அதற்குள்ளேயிருந்த பனை இலச்சினை மோதிரத்தை எடுத்தான்.

"அம்மணி! இதோ தாங்கள் அளித்த பனை முத்திரை மோதிரம். இலங்கையில் பூதிவிக்கிரம கேசரியின் ஆட்கள் இதை என்னிடமிருந்து பலவந்தமாகக் கவர்ந்து கொண்டது உண்மைதான். ஆனால் சேனாதிபதி திருப்பிக் கொடுத்து விட்டார். இதோ தங்களிடம் சேர்ப்பித்துவிடுகிறேன் பெற்றுக் கொண்டு அருள் புரிய வேணும்!" என்று கூறி முத்திரை மோதிரத்தை நீட்டினான்.

நந்தினி அதை உற்றுப் பார்த்துத் தான் கொடுத்த முத்திரை மோதிரம் அதுதான் என்று தெரிந்து கொண்டாள். "ஐயா! நான் கொடுத்ததை திரும்பி வாங்கிக்கொள்ளும் வழக்கமில்லை. உம்முடைய நேர்மையைச் சோதித்து அறிவதற்காகவே கேட்டேன். சோதனையில் நீர் தேறி விட்டீர். என்னுடைய ஆட்களைக் கொண்டு உம்மைச் சோதனை போடும் படியான அவசியத்தை எனக்கு ஏற்படுத்தவில்லை. மோதிரத்தை என்னுடைய ஞாபகத்துக்காக நீரே வைத்துக் கொள்ளலாம்!" என்றாள்.

"அம்மணி! யோசித்துச் சொல்லுங்கள். இது என்னிடமிருந்தால் மீண்டும் அவசியம் நேரும்போது உபயோகப்படுத்த வேண்டியிருக்கும்"

"அதைப்பற்றிக் கவலை இல்லை. எப்படி வேணுமானாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். உம்மை இப்போது மறுபடியும் கண்ணைக் கட்டிப் பல்லக்கிலே ஏற்றிக்கொண்டு போகச் சொல்லப் போகிறேன். உம்மைப் பிடித்த இடத்திலேயே திரும்பவிட்டு விடுவார்கள்."

"நான் அதற்கு மறுத்தால்?"

"இந்த பாழடைந்த அரண்மனையிலிருந்தும் கோட்டையிலிருந்தும் உம்மால் திரும்பிப் போக முடியாது. திரும்பத் திரும்பப் புறப்பட்ட இடத்துக்குத்தான் வந்து கொண்டிருப்பீர்."

"தேவி! இந்தக் கோட்டை? இந்தப் பாழடைந்த அரண்மனை?"

"ஆம் ஒரு காலத்தில் இந்தச் சோழநாடு பல்லவர் ஆட்சியில் வெகுகாலம் இருந்தது. அப்போது பல்லவ சக்கரவர்த்திகள் இங்கே கோட்டையும், அரண்மனையும் கட்டியிருந்தார்கள். பிறகு சோழநாடு பாண்டியர்கள் வசப்பட்டது. பாண்டிய மன்னர்கள் சில சமயம் இந்த அரண்மனையில் வசித்தார்கள். விஜயாலய சோழர் காலத்தில் இங்கே ஒரு பெரிய யுத்தம் நடந்தது. கோட்டை இடிந்து தகர்ந்தது. அரண்மனையிலும் பாதி அழிந்தது. மிச்சம் அழியாமலிருந்த பகுதியில் இப்போது நாம் இருக்கிறோம். இந்தக் கோட்டையைச் சிலர் பல்லவராயன் கோட்டை என்றும், இன்னும் சிலர் பாண்டியராயன் கோட்டை என்றும் சொல்வார்கள்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## தந்தை செய்த தந்திரம்

ஒரு சிற்றூரில் விவசாயி ஒருவர் இருந்தார். அவருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் நால்வரும் படிக்க விருப்பம் இல்லாமல், ஊர் சுற்றித் திரியலானார்கள்.

தன்னுடைய நிலத்தை உழுது பயிர் செய்தாலும் குத்தகைக்கு விடுவதற்குப் பதிலாக லாபம் கூடுதலாகக் கிடைக்குமே என்று விவசாயி கவலைப்பட்டார். மேலும், அவர்கள் எப்படி வாழப் போகிறார்களோ என்று வருந்திக் கெண்டிருந்தார்.

ஒரு நாள் மூத்த மகனைக் கூப்பிட்டு, "உன் தாய் இறந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. அவள் அணிந்திருந்த நகைகள் எல்லாவற்றையும் ஒரு குடத்தில் வைத்து, ஊருக்கு வெளியே இருக்கும் நம்முடைய காலியான தோட்டத்தில் புதைத்து வைத்தேன். எனக்கு வயதாகி விட்டது, அதை எடுத்து இப்போது உங்களுக்குப் பங்கு பிரித்து தரலாம் என்று நினைக்கிறேன். ஆனால், எந்த இடத்தில் புதைத்து வைத்தேன் என்பது எனக்கு நினைவு இல்லை கூலிக்கு ஆள்பிடித்து, மண்ணைத் தோண்டச் செய்து அதை எடுப்போமானால், தகவல் தெரிந்து, அரசு அதிகாரிகள் வந்து பறிமுதல் செய்து கொண்டு போய் விடுவார்களே என்று பயமாக இருக்கிறது" என்றார்.

நகைகள் என்று சொன்னதும் அவனுக்கு ஆசை மேலிட்டது. அப்பா! வேறு ஆள் வேண்டாம், நானே தோண்டுகிறேன் என்று கூறி, உடனே மண்வெட்டி எடுத்துக் கொண்டு போய் மண்ணைத் தோண்டத் தொடங்கினான்.

மற்ற மூவரும், அவன் எதற்காகத் தோண்டுகிறான்? வேலையே செய்யாதவன் இப்போது உழைப்பதற்கு என்ன காரணம் என்று ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டனர்.

அதை அறிந்த தந்தை, மூத்த மகனிடம் சொன்ன தகவலை மற்ற மூவரிடமும் கூறினார்.

அவர்களுக்கும் ஆவல் [illegible] ஒரு மண்வெட்டி எடுத்துக் கொண்டு சென்று தோண்டினார்கள்.

இரண்டு ஏக்கர் நிலத்தையும், இரண்டு மூன்று அடி ஆழத்துக்குத் தோண்டி விட்டார்கள். ஆனால் எதிர்பார்த்த குடமோ அகப்படவில்லை. கவலை உண்டாயிற்று.

"நம்முடைய சொத்து, நமக்குக் கிடைக்காமல் போகாது இப்போது கிடைக்காவிட்டாலும், பிறகாவது கிடைக்கும். இரண்டு ஏக்கர் நிலத்தை தோண்டியதால் எவ்வித நட்டமும் இல்லை. அதற்குப் பதிலாக, இப்போது வேர்க்கடலை பயிரிட்டால் நல்ல பலன் உண்டு. அது ஒரு குறுவைப் பயிர் அதைப் பயிரிட்டால் மூன்று மாதங்களில் நல்ல லாபம் கிடைக்கும் என்றார் தந்தை.

அவர் சொன்னபடியே வேர்க்கடலை பயிரிட்டு நல்ல லாபம் கிடைத்தது. தங்கள் உழைப்பு வீணாகவில்லை புதைத்து வைத்தது கிடைக்கவில்லை என்றாலும் பயிரில் அதற்கு இணையாகப் பலன் கிடைத்ததை நினைத்தார்கள்.

தந்தையின் தூண்டுதல் இல்லாமலேயே அவர்கள் நால்வரும் விவசாயத்தில் ஆர்வம் செலுத்தி உழைத்து மகிழ்ந்தனர். பிள்ளைகளை விவசாயத்தில் எவ்வாறு அக்கறை கொள்ளச் செய்யலாம் என்றுதான், செய்த தந்திரம் எளிதில் வெற்றி பெற்றதை நினைத்து, அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். உழைத்து உண்பதில் காணும் மகிழ்ச்சியே மகிழ்ச்சி!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்

தேர்தல் பிரசாரங்கள், தேர்தல் விஞ்ஞாபனங்கள் என எங்கும் தேர்தல் களம் உத்வேகம் கொண்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் முன்வைக்கின்ற கருத்துக்களைக் கேட்கும் போதெல்லாம் அவரை இவர் வெல்லவில்லை; இவரை அவர் வெல்லவில்லை என்று கூறுமளவுக்கு ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல.

இவ்வாறு தேர்தல் பிரசாரங்களில் முன்வைக்கின்ற கருத்துக்களைப் பார்க்கும் போது, இஃதெல்லாம் எங்கிருந்து வருகிறது என்று நினைக்குமளவுக்கு தேர்தல் பிரசாரம் பிரமாதம் எனலாம்.

அட, இலங்கையில் சம உரிமையை – சமத்துவத்தை நிலைநாட்டுவதாகக் கூறுகின்றவர்கள் வன்னி யுத்தம் நடந்தபோது எங்கிருந்தார்கள் என்பதுதான் தெரியவில்லை.

மகிந்த அரசே! தமிழ் மக்களைக் கொல்லாதே. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களைக் கொல்வது நம் சகோதரர்களைக் கொல்வதாகும் என்று துணிந்து கூறக்கூடிய சிங்களத் தலைவர்கள் எவரும் இந்த நாட்டில் இருந்திருக்கவில்லை.

ஆனால், இப்போது தமிழர்களுக்கு உரிமை வழங்க வேண்டும். அப்போதுதான் நாடு அபிவிருத்தியடைய முடியும்.

இனப் பிரச்சினையைத் தீர்க்காமல் நாட்டை முன்னேற்ற முடியாது என்றெல்லாம் தத்துவம் பேசப்படுகிறது.

இவ்வாறு பேசப்படுகின்ற தத்துவம் ஆட்சிப் பீடம் ஏறிய பின்பும் பேசப்படுமா? என்பதுதான் நம் கேள்வி.

ஆம், தமிழ் மக்கள் நீண்ட நெடும் அனுபவம் கொண்டவர்கள்.

சிங்கள ஆட்சியாளர்களை நம்பி ஏமாந்தவர்கள். இந்த ஏமாற்றம் ஒன்று இரண்டு தடவைகள் அல்ல. இன்றுவரை அதுவே நடந்தாகிறது.

ஆக, இப்போது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதை இலக்காகக் கொண்டு, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ற கருத்தை சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் முன்வைக்கின்றனர்.

இவ்வாறு முன்வைத்தவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகிவிட்டால், தேர்தல் பிரசாரத்தில் தாங்கள் கூறியதை அடியோடு மறந்து போய்விடுவர்.

இதுவே தமிழ் மக்களாகிய எங்களின் நீண்ட நெடுங்காலப் பட்டறிவு.

எனவே வள்ளுவர் கூறியதுபோல

***சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்.***

ஆம், தேர்தல் பிரசாரத்தில் – தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்வது ஒன்றும் எளிதான விடயமல்ல. மாறாக, சொல்லியதை செய்தாக வேண்டும். அதுவே அரசியல் தர்மம்.

# யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் திடீர் பொலிஸ் சோதனை வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய பஸ் நிலையத்தில் பொலிஸார் திடீர் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர்- பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், எதிர்காலத்தில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

குடிநீர்ப் பிரச்சினை, வீதி சீரின்மை, காணிப் பிணக்குகள், போக்குவரத்து சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்தும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

யாழ். மத்திய பஸ் நிலையத்திலும், முற்றவெளி மற்றும் கோட்டையை சூழவுள்ள பகுதிகளிலும் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொதுமக்கள் இதன்போது குறிப்பிட்டனர். இந்த முறைப்பாடுகளுக்கு அமைய, யாழ். மத்திய பஸ் நிலையத்தில் திடீர் சோதனைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு ஆளுநர் அவர்கள் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் பஸ் நிலையத்தில் 24 மணித்தியாலமும் பொலிஸ் காவலரண் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் கூறினார்.

மேலும் முற்றவெளி மற்றும் கோட்டையை சூழவுள்ள பகுதிகளில் இடம்பெறுவதாக கூறப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க, சிறந்த பொறிமுறை ஒன்றை திட்டமிட்டு துரித நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 826 திட்டங்களை செயல்படுத்த இந்த வருடம் 322 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 734 திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

மிக நீண்ட காலத்தின் பின்னர் திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதியை உரியவாறு பயன்படுத்த வேண்டும் என ஆளுநர் அவர்கள் தெரிவித்தார்.

அத்துடன் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் பிரதேசத்தில் வாழும் பொதுமக்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். (ம-7)

# ரணில் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்குமாறு கோரிய மனு நிராகரிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதை தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வழக்கினை தாக்கல் செய்த நபர் பொய்யான தகவலை நீதிமன்றத்தில் குறிப்பிட்டதாக கூறி அவருக்கு 50 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறிப்பாக பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கத் தவறியமை மற்றும் உயர் நீதிமன்றத்திற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் நீதியரசர்களை நியமிக்காமை போன்ற காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டு மனுதாரர் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

இந்த நியமனங்கள் வழங்கப்படாமைக்கு ஜனாதிபதியே காரணம் என்றும் எனவே அவர் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்குமாறு மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை, விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு பொய்யாக தகவல்களை சமர்ப்பித்துள்ளதாகவும், அந்த மனு அரசியலமைப்பின் 92வது சரத்து மீறப்பட்டுள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இந்த ஆட்சேபனையை மன்றில் முன்வைத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாதென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

# சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புகளை நிறுத்த நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து சமூக வலைத்தளங்கள் ஊடாக நடத்தப்படும் கருத்துக் கணிப்புகளை நிறுத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழு கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி இந்த வாரம் தேர்தல் ஆணையத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் இது குறித்து விவாதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தலைவர் [illegible]

இந்த கருத்துக்கணிப்பு காரணமாக சில வேட்பாளர்கள் பாரபட்சம் காட்டுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கருத்துக்கணிப்புகளை யார் நடத்தியது என்பது குறித்து தேர்தல் ஆணையமும் இந்த நாட்களில் ஆய்வு நடத்தி வருகிறது என்றார்.

ஆய்வின் தகவல்களும் பெறப்படும் என்றும், இந்தக் கருத்துக் கணிப்புகளை நிறுத்தும் முறை குறித்தும் ஆணையத்தில் விவாதிக் [illegible]

இலத்திரனியல் அல்லது அச்சிடப்பட்ட ஊடகங்கள் ஊடாக நடத்தப்படும் கருத்துக் கணிப்புகளை நிறுத்துவது இலகுவானது.

எனினும், சமூக ஊடகங்கள் ஊடாக நடத்தப்படும் கருத்துக் கணிப்புகளை நிறுத்துவது இலகுவானதல்ல.

ஆகையினால், இது தொடர்பில் விரைவான வழிமுறை தேவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# சட்டவிரோதப் பொருட்களுடன் கட்டுநாயக்கவில் ஐவர் கைது

உரிய வரி முறைமைகளை பின்பற்றாது சட்டவிரோத பொருட்களை விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டு வந்த 5 பயணிகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஒரு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட், விஸ்கி மற்றும் செய்மதி தொலைக்காட்சி ஒலிபரப்பு உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு சீன பிரஜைகள், இரண்டு இலங்கையர்கள் மற்றும் ஒரு இந்தியரும் உள்ளடங்கியுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

01

இன்று உலகின் பல பாகங்களிலும் செயற்பட்டு வரும் ஜனநாயக முறைமைகளானது ஒரே தன்மையுடையவை அல்ல. நிறைவேற்று விடயங்களிலும், அரசாங்கத்தின் செயற்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட சட்டவாக்கக் கருவிகளிலும் (அரசியல் அமைப்புகளிலும்) குறிப்பிடத்தக்க பல்வகைத் தன்மை காணப்படுகின்றது. பொதுவாக அவை அவற்றைப் பகிர்ந்து கொள்கின்றன என்பது அடிப்படையான தத்துவம் என்பதுடன் அதிலிருந்தே ஏனைய பொது அம்சங்களும் பெறப்படுகின்றது.

ஒரு நாட்டின் சனத்தொகை அதிகரிப்பு,நிலப்பரப்பு விரிவடைதல் போன்ற காரணங்களால் ஆட்சி தொடர்பான பொறுப்புகளும் சிக்கலடைகின்றன. 17 ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் உலகம் முழுவதும் பரவிய தாராண்மைவாதக் கருத்துக்களில் ஒடுக்கப்பட்ட ஆட்சி முறையாக இருந்த முடியாட்சி முறை விமர்சிக்கப்பட்டது.

அதன் பெறுபேறாக 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் நவீன அரசுகளில் ஆட்சி இயல்புகள் மாற்றமடையத் தொடங்கின. தமது நாட்டின் பிரதேச இன கலாசார பலவகைத் தன்மைகளை ஆட்சி விவகாரங்களில் ஒன்றிணைப்பதற்காக இந்நாடுகள் பின்பற்றிய வழிமுறைகள் இரண்டு முறைகளில் அமைந்தன. ஒன்று அதிகாரப் பரவலாக்கல் மற்றது அதிகாரத்தை பகிர்ந்தளித்தல் ஆகும்

அதிகாரப் பரவலாக்கல் என்பது ஓர் அரசின் பிரதான அதிகாரங்களான சட்டஆக்கம், நிறை வேற்று நிர்வாகம், நீதி பரிபாலனம், என்பவற்றை பகிர்ந்தளிக்காது நிர்வாக அதிகாரத்தை மட்டும் பிரதேச ரீதியாக வழங்கும் முறை ஆகும். இங்கு அதிகாரப் பரவலாக்கல் நடைபெறுவது அரசியல் யாப்பின் மூலமாக அல்லது சட்டவாக்கச் சபை எனப்படும் பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றப்படும் ஒரு சட்டத்தின் மூலமேயாகும்.

இதனால் எப்போதும் இவ்வதிகாரங்களை மீளப்பெறுவதற்கும் மாற்றியமைப்பதற்குமான அதிகாரம் பாரளுமன்றத்திற்கு உண்டு. உலகில் பல நாடுகள் பிரதேச மட்டம் வரை அதிகாரத்தை பகிர்ந்தளித்தலின் போது உண்மையில் செய்திருப்பது அதிகாரத்தைப் பரவலாக்குவதேயாகும்.

அதிகாரத்தை பகிர்ந்தளித்தல் என்பதால் கருதப்படுவது மத்திய அரசு யாப்பின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அதிகாரத்தை பிரதேச ஆட்சியாளர்களுக்கு வழங்குவதாகும். இம்முறை பெரும்பாலும் பயன்படுத்தப்படு வது பன்மைக் கலாசாரமுள்ள நவீன அரசுகளிலாகும்.

இங்கு பல்வேறு நாடுகளில் பல்வேறு மட்டங்களில் மத்திய அரசின் அதிகாரங்கள் பிரதேச ஆட்சி பிரிவுகளுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவது அரசியல் யாப்பினூடாக பட்டியல்கள் மூலம் செய்யப்படுவது இதன் சிறப்பம்சமாகும்.

அந்தப் பட்டியல்களில் மத்திய அரசுக்கும் பிரதேச அரசுக்கும் உள்ள அதிகாரங்கள் வெவ்வேறாக கூறப்பட்டிருக்கும். அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் என்பது எல்லா நாடுகளிலும் ஒரே விதமாக இடம் பெறாத அதேவேளை ஒவ்வொரு நாடும் தமது நாட்டின் தேவைகளுக்கேற்ப அதிகாரப் பகிர்ந்தளிப்பை மேற்கொண்டுள்ளது

அரசியல் யாப்பில் இறைமை அதிகாரத்தை பரவலாக்குவதன்/ பகிர்வதன் மூலம் அரசியல் யாப்பை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஒற்றையாட்சி அரசியலமைப்பு
2. அரைகுறை சமஷ்டி அரசியலமைப்பு
3. சமஷ்டி அரசியலமைப்பு.

### ஒற்றையாட்சி அரசியலமைப்பு

ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை என்பது அரசின் அதிகாரம் ஒன்று குவிக்கப்பட்டு அவ்வதிகாரம் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசிடம் மட்டும் காணப்படுமாயின் அது ஒற்றையாட்சி அரசியலமைப்பு எனப்படும். இங்கு அரசின் இறைமை அதிகாரம் தனியொரு தேசிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருப்பதனைக் கருதும்.

### அரைகுறை சமஷ்டி அரசியலமைப்பு

இந்தியாவே அரைகுறை சமஷ்டி ஆட்சி நிலவுகின்ற நாடாகும். இந்தியாவில் ஒற்றையாட்சிப் பண்புகளே அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தியக் கூட்டாட்சி 28 மாநிலங்களையும் 8 யூனியன் பிரதேசங்களையும் கொண்டதாக விளங்குகின்றது. எனினும் மாநிலங்களுக்கு குறைந்தளவிலான அதிகாரங்களே கொடுக்கப்பட்டுள்ளன.

கூட்டாட்சி தன்மைகளையும் கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகளையும் கொண்டதாகவே இந்திய கூட்டாட்சி முறை உள்ளது. கூட்டாட்சி தன்மையினை விட கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகளே அதிகம் உள்ளன. இதனால் இந்தியக் கூட்டாட்சி அரை குறை சமஷ்டியாகவே கொள்ளப்படுகின்றது.

இந்திய கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகளை நாம் நோக்குவோமாயின், கூட்டாட்சி என்ற சொல் அரசியல் யாப்பில் இல்லை. மாறாக, மாநிலங்களின் ஒன்றியம் என்றே உள்ளது.

மாநிலங்களுக்கு சமமான நிலை இல்லை, பாராளுமன்றின் 2ஆவது சபையில் மாநிலங்களுக்கு சம பிரதிநிதித்துவம் இல்லை, அதிகாரப் பங்கீட்டில் மத்திய அரசு அதிகளவிலான அதிகாரப் பங்கீட்டைக் கொண்டுள்ளது.

மாநில எல்லைகளை மாற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. மாநில அரசுகளைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. நாடு முழுவதற்கும் ஒரே நீதிக் கட்டமைப்பு மற்றும் தேர்தல் முறை காணப்படுகின்றது.

ஆனால் சமஷ்டி ஆட்சி முறையின் பிரதான பண்புகளினை நாம் நோக்குவோமாயின், அரசியல் யாப்பின் மேன்மை முக்கிய பண்பாகும். சமஷ்டி ஆட்சி நாடுகளில் அரசியல் யாப்பே மேன்மை பொருந்தியதாக காணப்படும். இவ்வாட்சியில் காணப்படும் மத்திய அரசாங்கமும் பிராந்திய அரசாங்கமும் அரசியல் யாப்பிலிருந்தே அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கின்றன. அரசியல் யாப்பினை மாற்றுவதிலிருந்துகூட மத்திய அரசாங்கமும் பிரதேச அரசாங்கங்களும் இணைந்தே மேற்கொள்கின்றன.

### சமஷ்டி (federation) மற்றும் கூட்டாட்சி (confederation)

கூட்டாட்சி முறையில், சமஷ்டி முறையை விடக் கூடுதலாக நடைபெறுகின்ற அதிகாரப் பரவலாக்கல் முறையொன்றே உள்ளது. கூட்டாட்சி முறையென்பது. சுதந்திரமான நாடுகள் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக நிறுவிக் கொள்கின்ற அரசுகளின் கூட்டுச் சங்கமொன்றாகும். மத்திய அரசுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உறுப்பு அரசுகளால் அவற்றிற்குரிய அடிப்படை அதிகாரங்கள் வைத்திருக்கப்படும்.

அதேபோன்று மத்திய அரசின் நிலைப்பாடானது, உறுப்பு அரசுகளின் விருப்பின் மீதே தீர்மானிக்கப்படுகிறது. மத்திய அரசால் உறுப்பு அரசுகளில் வாழும் மக்கள் மீது தனது அதிகாரத்தை நேரடியாகவே அமுலாக்க முடியாது. அதனை கூட்டு அரசுகளின் ஊடாகவே அமுலாக்க முடியும். இதன் படி மத்திய அரசானது, கூட்டு அரசுகளின் முகவர் ஒன்றே ஒழிய சுதந்திரமானதொரு நிறுவனமாகாது. 1781-1789 ஆம் காலகட்டத்தில் இவ்வாறான அரசுகளின் கூட்டுச் சங்கமொன்றே அமெரிக்காவில் இருந்தது.

சமஷ்டி முறையில் அலகுகளுக்கு, கூட்டாட்சி முறையைவிடக் குறைவாக அதிகாரம் கிடைக்கின்ற முறையொன்றே உள்ளது. சமஷ்டி முறையொன்று, மத்திய அல்லது சமஷ்டி அரசொன்றை உருவாக்குகின்ற நோக்கத்துடன் சுதந்திரமான பல அலகுகள் ஒன்றாக இணைவதன் மூலமே உருவாகின்றன.

சமஷ்டி அரசை உருவாக்கியதன் பின்னர் மத்திய அரசு அல்லது பிராந்திய அரசுகள், அரசியலமைப்பின் மூலம் இணங்கியுள்ளவாறு, ஆளுகை அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் கட்டுக்கோப்பினுள்ளேயே செயற்படுகின்றன. இவை இரண்டுக்கும் இடையே பல அடிப்படை வித்தியாசங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

- கூட்டாட்சி முறையில் மத்திய அரசுக்கு உறுப்பு அரசுகளிடமிருந்தே அதிகாரம் கிடைக்கின்றது. ஆயினும் சமஷ்டி முறையினுள் மத்திய அரசும் பிராந்திய அரசுகளும் ஒரு பொது மூலத்திலிருந்தே அதிகாரத்தைப் பெற்றுக் கொள்கின்றன. அதாவது அரசியல் அமைப்பிலிருந்தாகும்.

- கூட்டாட்சி முறையில் மத்திய அரசால் உறுப்பு அரசுகளிலுள்ள பிரசைகள் மீது அதிகாரத்தை அமுலாக்க முடியாது. முடியுமாயிருப்பின் மிகவும் வரையறுக்கப்பட்டதொரு அதிகாரமே உண்டு. ஆயினும் சமஷ்டி முறையினுள் அரசியலமைப்பின் மூலம் மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள துறைகளிலும் அத்துடன் அதிகார அளவைப் பொறுத்தும் பிராந்திய அரசுகளின் பிரசைகள் மீது தமது அதிகாரத்தை அமுலாக்க முடியுமாயுள்ளது.

- கூட்டாட்சி முறையில், மத்திய சட்டமன்றமொன்று கிடையாது. ஆயினும் சமஷ்டி முறையில் மத்திய சட்டமன்றமொன்று உள்ளது.

- கூட்டாட்சி முறையில் இறைமையுடன் கூடிய பல அரசுகளின் கூட்டுச் சங்கமொன்றே உள்ளது. ஆயினும், சமஷ்டி முறையில் பல அரசுகள் ஒன்று சேர்வதன் மூலம் புதியதொரு அரசு உருவாகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பப் பெண்...

நடராஜா (வயது-62) என்ற பெண் மணியே உயிரிழந்தவராவார்.

மேற்படி பெண்மணி கிளிநொச்சி யில் உள்ள மகளின் வீட்டுக்கு அண்மை யில் சென்றிருந்தபோது அங்கு அவ ருக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கிளிநொச்சி வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். காய்ச்சல் விடாமல் தொடர்ந்து விட்டு விட்டு காய்ந்ததன் காரணமாக கடந்த 16ஆம் திகதி ஊர்காவற்றுறை வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

காய்ச்சல் நிற்காத காரணத்தினால் 19ஆம் திகதி ஊர்காவற்றுறை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் 26 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுப் புதன்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## வங்களாவில்...

யிட்டுள்ளது.

அந்தக் கடற்பரப்புகளில் மிக பலத்த காற்றுடன் (மணித்தியாலத்துக்கு 70-80 கி.மீ) கனமழை பெய்யக்கூடும் என்றும், அந்தக் கடற்பரப்புகள் மிகவும் கொந் தளிப்பாக இருக்கும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் விளைவாக வடக்கு வங் காள விரிகுடாவின் ஆழ்கடல்ப் பகுதி யில் நெடு நாள் மீன்பிடிப் படகுகள் மற் றும் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடு படும் பணியாளர்கள் உடனடியாகக் கரைக்கு அல்லது பாதுகாப்பான இடத் திற்குச் செல்லுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதாவது நேற்றுப் (28) பிற்பகல் 3.30 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த அறி விப்பு இன்று பிற்பகல் 3.30 மணி வரை செல்லுபடியாகும். (ம-7)

## விபத்தை...

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இருந்து காரைச் செலுத்தி வந்த இளை ஞர் ஒருவர் உக்குளாங்குளம் பகுதி யில் விபத்து ஒன்றை ஏற்படுத்தி விட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார்.

இதன்போது வைரவப்புளியங் குளம் மற்றும் நகரப் பகுதியில் பய ணித்துக் கொண்டிருந்த ஏனைய வாக னங்களுடனும் மோதி விபத்தை ஏற் படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த காரை இளைஞர்கள் சிலர் விரட்டிச் சென் றுள்ளனர். அதிவேகமாகப் பயணித்த கார் பூந்தோட்டம், பெரியார்குளம் பகுதியில் வீதியின் கரையில் இருந்த மின்சாரக் கம்பத்துடன் மோதி நின்றது.

காரின் சாரதியை மடக்கிப் பிடித்த இளைஞர்கள், அவரை நையப்புடைத் ததுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்த னர்.

விபத்துத் தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

## நபரொருவரின்...

அதே இடத்தைச் சேர்ந்த பொன் னம்பலம் தங்கவேலாயுதம் (வயது- 83) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவரா வார்.

அவர் வீட்டில் தனிமையில் வசித்து வந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை நண்பகல் இவர் சந்தேகத்துக்கிட மான முறையில் வீட்டில் தூக்கில் தொங்கிக் காணப்படுவதாகப் பருத்தித் துறைப் பொலிஸாருக்கு தகவல் தெரி விக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத் தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை களை மேற்கொண்டு பிரேத பரிசோத னைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## ஜனாதிபதித்...

யுடன் இருக்கவேண்டும் எனத் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

ஐரோப்பிய ஒன்றியத்தால் மேற் கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மற் றும் சமூக ஊடகங்களில் பரவிவரும் கருத்துக் கணிப்புகள் தேர்தல் செயல் முறையை ஒழுங்குபடுத்தும் விதிமுறை களுக்கு எதிரானவை .

ஐரோப்பிய ஒன்றியம் ஒரு அறிக் கையை வெளியிட்டு, தேர்தல் கருத்துக் கணிப்புகளை மேற்கொள்ளவில்லை என்பதுடன், மேலும் பரப்பப்படும் கணிப்புகள் பொய்யானவை என்று கூறியுள்ளது தேர்தல் ஆணையம்.

மேலும் வாக்களிப்பவர்கள் தவ றான தகவல்களைப் பற்றி எச்சரிக்கை யாக இருக்கவும், தேர்தல் முடிவு களை எடுக்கும்போது போலித் தகவல் கள் மூலம் தவறாக வழிநடத்தப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொண் டுள்ளது.

"இது ஒரு சந்தைப்படுத்தல் முயற்சி யாகும்" அவர்கள் இந்தப் பொதுக் கருத் துக் கணிப்புகளுக்கான மனிதர்களை எவ்வாறு தேர்வு செய்கிறார்கள் என் பதற்கான விவரங்களை அவர்கள் வெளியிடுவதில்லை. இந்தப் போலிக் கருத்துக் கணிப்புகளின் நோக்கம் அவர்களது வாக்காளர் அடிப்படையை அதிகரிப்பதாகும். ஒருவர்மேலே வரும்போது மற்றொருவர் கீழே செல்லும்போது, அவர்களுக்கு வாக்குகள் அதிகரிக்கும்.

அவர் மேலும் தவறான தகவல் களைப் பயன் படுத்தி வாக்கா ளர்களை தவ றாக வழிநடத்து வது முக்கிய மான சமூக-அர சியல் விவகாரங் களில் நம்பிக்கை யின்மையை வளர்த்து உண் மையை மறைக் கும் அபாயத்தை உருவாக்குகிறது பொய்யான மற் றும் உண்மை யான கருத்துக் கணிப்புகளைப் பிரித்தறிவது கடி னமாக இருக்கி றது. அதைக் குறி த்த உண்மையை கற்பனைக்கு மாறு படுவது பொதுமக் களின் பொறுப் பாகும் என்றார். (ம-7)

## மேம்...

கலந்து கொண்ட போதே அவர் இத னைக் கூறியுள் ளார்.

நாமல் ராஜ பக்ஷ மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டிற்கு தீங்கு விளைவிக் கும் அரசியல் முடிவை நாங்கள் ஒருபோதும் எடுக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் அபிவிருத்தியை நினைத்து இத் தில் இருந்து எவ்வாறு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பதே எனது பொறுப்பும் சவாலும் என நான் கருதுகின்றேன்.

இன்று சிறு மற்றும் நடுத்தர வர்த்த கர்கள் மிகவும் கடினமான நிலையில் உள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் வரம் பற்ற மற்றும் நியாயமற்ற வரிக்கொள் கையை நடைமுறைப்படுத்துகிறது.

கோட்டாபயவின் அரசாங்கம் வரி களைக் குறைத்தது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டோம்.

இந்த நாட்டு மக்களுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய வரிக்கொள்கையை அமுல்படுத்த வேண்டும் என்று நாங் கள் இன்னும் நம்புகிறோம்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம். கிராமப் பொருளா தாரத்தைக் கட்டியெழுப்புவதுடன், வறிய மனிதருக்கான பொருளாதா ரத்தை உருவாக்குவோம்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை உங்களுக்காக கட்டியெழுப்ப ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தயாராக உள்ளது " என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 5579 — J 5 7 2 3 3 7 — அத சம்பத J 2 3 3 7 — சீட்டிழுப்பு இலக்கம் 154 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 1609 — B 29 51 56 68 B — Double Chance 62872

மெகா பவர் — திகதி 28/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1927 — E 12 27 59 72 76 — 55971

லக்கி 7 VIP — திகதி 2024.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0405 — X 6 0 5 2 1 8 X

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3821 — சீட்டிழுப்பு திகதி 28.08.2024 — B 07 33 40 71 — B 53172 — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0888 — சிம்மம் 03 22 39 61 சிம்மம் — 03907 — 03

உத்தியோகபூர்வ முடிவுகள் — 28.08.2024 — வெற்றி வாரம் 287 — வர்ணம் பச்சை — G — 6 2 5 4 1 0 — 34595 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,937,188.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2553 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 28.08.2024 — தினம் புதன்கிழமை — 17 22 61 76 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,496,537.60

சனிதா — திகதி 2024.08.28 — வெற்றி வாரம் 4714 — 16 42 56 68 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,231,601.60 — 28093

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4265 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.08.28 — தினம் புதன்கிழமை — 02 09 10 48 — துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,500,341.20 — 219322

H 18 38 45 68 70 — 1729 — இள நீலம் — 28.08.2024 — புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 541,617,739.40

ஜயோதா Jayoda — திகதி 2024.08.28 — வெற்றி வாரம் 2055 — வர்ணம் மஞ்சள் — 22 25 35 57 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,084,974.40

ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2379 — சீட்டிழுப்பு திகதி 2024.08.28 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,351,874.40 — 47 61 75 76 Q — 359099


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

வித்துள்ளது.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இது தொடர்பான வைபவம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனமும் இன்று வெளியிடப்படவுள்ளது.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான சுஜீவ சேனசிங்க தெரிவிக்கையில், கொள்கைப் பிரகடனத்தின் அனைத்து திட்டங்களும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ம-7)

## வரியை...

வித்துள்ளார்.

அது குறித்து எதிர்காலத்தில் அறிவிப்பேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று எஹலியகொடயில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

இன்னொரு பிரச்சினை நீங்கள் சம்பாதிக்கும் போது செலுத்தப்படும் வரி. அதுவும் ஒருபெரிய பிரச்சினை. ஐ.எம்.எப் மற்றும் நாங்களும் அதை திருத்த வேண்டும் என்று ஒப்புக்கொண்டோம்.

அடிப்படை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஒரு முன்மொழிவைச் செய்துள்ளோம், அவர்கள் மற்றொரு திட்டத்தை முன்வைத்துள்ளனர். எனவே இந்த இரண்டு முன்மொழிவுகளும் விவாதிக்கப்பட்டன, நாங்கள் ஒரு உடன்பாட்டை எட்டியதும், சரியான தொகையை இங்கே அறிவிப்போம் என்றார். (ம-7)

## அதிகாரப்...

விருக்கிறது.

அத்துடன் தேர்தல் முடிவு எத்தகையதாக இருந்தாலும் அந்த இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று வேட்பாளர்களிடம் கோரப்படுகிறது.

அரசியல் தீர்வொன்றை நோக்கிய தேசிய பேச்சுவார்த்தைக்கான ஒரு தொடக்கப்புள்ளியாக "இமாலயப் பிரகடனத்தை" உருவாக்கிய பௌத்த பிக்குகள் மற்றும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் உறுப்பினர்களினால் 2023 ஏப்ரலில் முன்னெடுக்கப்பட்ட முன்முயற்சி உட்பட வேறு பல முன்னெடுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

குறிக்கோள்கள்

அரசியல் கட்சிகள், துறைசார் நிபுணர்கள் அமைப்புகள் மற்றும் அக்கறையுடைய ஏனைய குழுக்களை உள்ளடக்கி அறிக்கைக்கான ஆதரவை விரிவுபடுத்தல்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துதல்.

கீழே விபரிக்கப்படும் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஆதரவு தருவதாக உறுதியளிக்குமாறு வேட்பாளர்களிடம் கோருதல்.

நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு புதிதாக தெரிவாகும் ஜனாதிபதியிடம் கோருதல்.

**1) அதிகாரப் பகிர்வு**

பிராந்தியங்களுக்கு சமநிலையான அதிகாரப்பரவலாக்கத்தையும் மத்தியில் (செனட் - மேல்சபை) அதிகாரப் பகிர்வையும் உறுதிப்படுத்தி ஐக்கியத்தை மேம்படுத்துகின்ற அதேவேளை பிராந்திய சுயாட்சியை மதித்தல்.

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

நாட்டின் சகல பாகங்களிலும் வாழ்கின்ற பிராந்திய சிறுபான்மையினத்தவர்களுக்கு இது பொருந்தும்.

இனத்துவ மற்றும் மத ரீதியான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்த நிர்வாக மாவட்ட எல்லைகளை நிர்ணயம் செய்து ஒழுங்கமைத்தல்.

காணி ஆணைக்குழு ஒன்றின் ஊடாக தேசிய காணிக்கொள்கையை நடைமுறைக்கு கொண்டுவருவதுடன் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தில் குறித்துரைக்கப்பட்டிருப்பதன் பிரகாரம், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்தல்.

**2) நிலைமாறுகால நீதி**

நிலைமாறுகால நீதியின் சர்வதேச நியமங்களின் பிரகாரம் போரின் விளைவான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது. இவற்றில் காணாமல் போனவர்கள், கைதிகள், இழப்பீடு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் உட்பட மனித உரிமைமீறல்களுக்கான பொறுப்புக்கூறல் ஆகியவை அடங்கும்.

ஒப்புரவான இராணுவப் பிரசன்னம், துருப்புக்களின் மட்டங்களை வழமை நிலைக்கு கொண்டுவருவதுடன் வழமை நிலை மற்றும் பாதுகாப்பு உணர்வை வளர்ப்பதற்காக வடக்கிலும் கிழக்கிலும் உள்ள ஆயுதப் படைகளின் பிரசன்னம் ஏனைய பிராந்தியங்களுக்கு விகிதப் பொருத்தமான முறையில் பேணப்படுவதை உறுதி செய்தல்.

பொலிஸ் நடைமுறைகளை தரப்படுத்துதல் - வடக்கிலும் கிழக்கிலும் பொலிஸ் செயற்பாடுகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளதைப் போன்று ஒரே தராதரத்திலும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல். (ம-7)

# நாமல் ஜனாதிபதியானால் குடும்ப ஆட்சி மீள மலரும்

## அநுர சுட்டிக்காட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆட்சியைக் கைப்பற்றினால் உறவினர்களுக்கே பதவிகள் பகிரப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமாரதிசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை ஸ்தாபித்தார், தம்பியை ஜனாதிபதியாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்.

அடுத்த தம்பி பசில் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவியை வழங்கினார். அண்ணனை அமைச்சராக்கினார். சமல் ராஜபக்ஷவின் புதல்வருக்கு அமைச்சுப் பதவியை வழங்கினார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவ்வாறு உறவினர்கள் இல்லை.

அதன் காரணமாக அவர், கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு ஆலோசகர் பதவிகளை வழங்கியுள்ளார்.

சாகல ரத்னாயக்க, அகில விராஜ் காரியவசம், ஆஷு மாரசிங்க, ருவன் விஜேவர்த்தன, ஹரீன் பெர்னாண்டோ, மனுச நாணயக்கார ஆகியோருக்கு இந்த ஆலோசகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான காரணம் என்ன?

ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காமல் தங்களது வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்படுவதாகத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1074)
076 825 7716 (ஆகாஸ்)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1073)

புவியியல் "A" தரப் பெறுபேற்றிக்கான 5 பரீட்சைகள்
P.Sகுமரன்
අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024
(C-1075)
භූගෝල විද්‍යාව புவியியல் A/L 2024 Geography | பகுதி I சனி 12.00 | 22 T I
පැය තුනයි மூன்று மணித்தியாலம் Three hours | பகுதி II ஞாயிறு 12.00 | 22 T II
பரீட்சை நிலையம் பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்
விடைத்தாள் மதிப்பீட்டுப் புள்ளிகள் - செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு
பதிவுகள் மேற்கொள்ளவும் – 077 611 6453, 077 220 9651 P.Sகுமரன்

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(289)

இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்போது 9990/= ரூபாவிலிருந்து
யாழ்ப்பாணம் - சென்னை
விமானப் பயணச் சீட்டுக்களை
குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (295)

மொத்தக் கொள்வனவு
அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்கு பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 773 0900
(295)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1073)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

விற்பனைக்குண்டு
யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும், யாழ் ஸ்ரான்லி வீதியில் 3 கடைகளும், யாழ் K.K.S வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S Road முகப்புடன் 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
(1812)
0777 23 25 35

காணி விற்பனைக்கு
மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இருந்து 300 m தூரத்தில் 3 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
076 105 6343
076 928 4191
(1805)

கட்டடம் வாடகைக்கு
கிளிநொச்சி நகரில் கணேசபுரம் பகுதியில் A9 வீதியில் இருந்து 100m தூரத்தில் கீழ்த் தளத்தில் இரண்டு அறைகள், இரண்டு பாத்ரூம், சமையலறை, பெரிய ஹோல். இரண்டாம் மாடியில் 75 - 100 பேர் அமரக் கூடிய பெரிய ஹோல், பாத்ரூம், சமையலறை, இரண்டு பக்கமும் அழகிய பல்கனியும் கொண்ட வீடு மற்றும் கார் பார்க், இளைப்பாறும் குடில்கள் கொண்ட கட்டடம் வாடகைக்கு விடப்படும். வாடகை பேசித் தீர்மானிக்கலாம். பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(1809)
077 531 2937, 075 968 3257


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.